விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 03 வெள்ளிக்கிழமை (19.11.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 335




உரும்பிராய், மருதனார்மடம் வீதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற மினி பஸ் மோட்டார் சைக்கிள் விபத்தில்...

## வெள்ளைக்கொடி விவகார வழக்கு சரத்தின் சுகவீனத்தால் ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் உடல் நலக் குறைவு காரணமாக வெள்ளைக்கொடி விவகார வழக்கு எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது வழக்கை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு ஒத்தி வைப்பதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

சரத் பொன்சேகாவை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் அவரது குடல் மற்றும் நுரையீரல் என்பன பாதிக்கப் பட்டுள்ளதால் அவர் சுகவீனம் அடைந்துள்ளதாக சரத் பொன்சேகாவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

முக்கியமாக உடற்பயிற்சிகளை செய்ய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காததால் அவர் நோய்வாய்ப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். அத்துடன் சரத் பொன்சேகா தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறையின் கூரை விரிசல் காணப்படுவதால் சிறைக்கூடம் மழையில் நனைந்துள்ளதாகவும் அவர் சுகவீனம் அடைய இதுவும் ஒரு காரணம் என பொன்சேகாவின் சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனைக் கவனத்தில் கொண்ட நீதிமன்றம், பொன்சேகா உடற் பயிற்சிகளில் ஈடுபட வசதிகளைச் செய்து கொடுக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது. அத்துடன் மழைக்காலத்தில் நனையாத வகையிலான சிறைக் கூண்டில் அவரைத் தடுத்து வைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ந-5)

# மாவீரர் தினத்தில் யாழ் வரும் இந்திய அமைச்சர் கிருஷ்ணா

## இனப்பிரச்சினை குறித்துப் பேசுவார்



(கொழும்பு)

**இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா மாவீரர் தினமான 27ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகிறார். இங்கு வரும் அவர் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்துவார் என கொழும்பு ஊடகங்கள் ஊகம் வெளியிட்டுள்ளன.** (16ஆம் பக்கம் பார்க்க)

## நாடுகடந்த தமிழீழம் அரசு அமைதி பேணுகிறது

### ரவி கருணாநாயக்க குமுறல்



(கொழும்பு)

நாடுகடந்த தமிழீழ இராச்சியம் தொடர்பில் அரசாங்கம் ஏன் அமைதியைப் பேணுகிறதுஎன,

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு பாரதூரமான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக சுட்டிக்காட்டிய அவர், இவ்வாறான பின்னணியில் அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. (16ஆம் பக்கம் பார்க்க)

### உரும்பிராய்-மருதனார்மடம் வீதியில்

## மினிபஸ்-மோ.சைக்கிள் விபத்து ஒருவர் பலி ; ஒருவர் படுகாயம்

(உரும்பிராய்)

உரும்பிராய்-மருதனார்மடம் வீதியில் இடம்பெற்ற மினிபஸ்-மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். இப்பரிதாப சம்பவத்தில் சுன்னாகம் சபாபதி முகாமைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன் (வயது 30) என்பவரே உயிரிழந்தவராவார்.

மற்றொருவரான சுன்னாகத்தைச் சேர்ந்த எஸ்.கோபு (வயது 30) என்பவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, உரும்பிராய்-மருதனார்மடம் வீதியில் ஒழுங்கை ஒன்றில் (16ஆம் பக்கம் பார்க்க)

# புலிப் பயங்கரவாதத்திற்குப் பதிலாக ராஜபக்ஷ குடும்ப பயங்கரவாதம்

## மங்கள சமரவீர எம்.பி. சீற்றம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலி பயங்கரவாதத்திற்கு பதிலாக ராஜபக்ஷ குடும்ப பயங்கரவாதம் தலைதூக்கியுள்ளதென ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இரண்டாம் தவணைக்கான பதவிப் பிரமாண நிகழ்வுகளுக்காக சுமார் 500 கோடி ரூபாய் செலவிடப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் அதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

முதலாம் தவணை ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியுள்ளார்.

மகிந்த சிந்தனை கொள்கைத் திட்டம் அமுல்படுத்தப்படவில்லை. சுயாதீன ஆணைக்குழுக்கள், அரச நிறுவனங்கள் மற்றும் நீதிமன்றம் உள்ளிட்ட (16ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் சொகுசுவீடு வெள்ளவத்தையில் விற்பனை

### விசாரணை தொடர்கிறது

(கொழும்பு)

கொழும்பின் வெள்ளவத்தைப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதியைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டு பின்னர் விற்பனை செய்யப்பட்ட சொகுசு இல்லம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த இல்லத்தின் பெறுமதி 500 கோடி ரூபாய் என லங்கதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த இல்லத்தை விற்பனை செய்து அந்தப் பணத்தை புலிகளின் சர்வதேச வலையமைப்பிடம் ஒப்படைத் (16ஆம் பக்கம் பார்க்க)

## 2ஆவது தடவையாக மகிந்த ஜனாதிபதியாக பதவியேற்பு

### மந்திரிகள், பிரதானிகள் பங்கேற்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று இரண்டாவது தடவையாக ஜனாதிபதி பதவியை ஏற்கவுள்ளார்.

இதனை முன்னிட்டுதேசிய வைபவம் இன்று கொழும்பு காலிமுகத் திடலில் நடைபெறவுள்ளது.

கடந்த 2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மூலம் (16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை

## வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் – 2011

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள், சேவைகள் வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து 2011 ம் ஆண்டிற்கு பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப் படிவங்களை கீழ்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்தை தயாரித்து ஒவ்வொரு இலக்கத்துக்குமான வழங்கல்கள்/ சேவைகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக ரூபா100/= ஐ எமது அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது பணிப்பாளர் போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் என்ற பெயரில் இலங்கை வங்கி மேற்தரக் கிளையில் உள்ள நடைமுறைக்கணக்கு இலக்கம் 7040260 ற்கு செலுத்தி வங்கிப் பற்றுச்சீட்டை (Credit Slip) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து தபால் உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் **வழங்கல்கள்/ சேவைகள் பதிவுசெய்தல் – 2011** எனக் குறிக்கப்பட்டு பணிப்பாளர் போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 15.12.2010ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அனுப்பிவைக்க வேண்டும்

தொகுதிகள் :

தொகுதி "A" - பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" - பொருட்கள் வழங்குதல் (மருத்துவம்)
தொகுதி "C" - சேவைகள்
தொகுதி "D" - வாகனத் திருத்தமும் சேவிஸ் செய்தலும்

| தொகுதி இல | பொருட்கள் விபரம் (பொது) |
|---|---|
| A - 01 | காகிதாதிகள் எழுதுபொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/உருக்கு) |
| A - 03 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் றோனியோ இயந்திரம் தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள். |
| A - 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள்கல் வகைகள், நீர்க்குழாய் பைப்புக்கள், பைப் இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 06 | சகலவிதமான அலுமினிய வீட்டுப்பாவனைப் பொருட்கள் |
| A - 07 | தும்புமெத்தை, இறப்பர் மெத்தை, மெக்கின்ரோஸ், எலாஸ்டிக், நைலோன்நூல் |
| A - 08 | கட்டட இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருட்கள் மணல், கல், தீராந்தி, சலாகை உட்பட |
| A - 09 | மின்சாரப் பொருட்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், மின்சார பல்புகள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்களும் |
| A - 10 | புற்பாய், தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A - 11 | ஊத்தைச்சோடா, அழுக்கு நீக்கும் பவுடர்கள், விம், ஹார்பிக், சேவிங் பிளேட் மற்றும் ஏனையவை |
| A - 12 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் டயர், டியூப் மற்றும் பற்றறிகள் |
| A - 13 | தோல் உற்பத்திப் பொருட்கள் – சப்பாத்துக்கள், சிலிப்பர்கள் |
| A - 14 | குளிர் சாதனப் பெட்டிகள், காற்றுக் குளிராக்கிகள் மற்றும் அதன் உதிரிப்பாகங்களும் |
| A - 15 | சகல வகையான ரெக்சீன் துணிகள், பொலித்தீன் |
| A - 16 | இறப்பர் முத்திரை வகைகள் |
| A - 17 | பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்து பானங்கள் |

| தொகுதி இல | பொருட்கள் விபரம் (மருத்துவம்) |
|---|---|
| B - 01 | Surgical Instruments |
| B - 02 | Laboratory Consumables |
| B - 03 | Laboratory equipment |
| B - 04 | Surgical / medical / equipments |

| தொகுதி இல | சேவைகள் விபரம் |
|---|---|
| C - 01 | உருக்கு மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் |
| C - 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் (காற்றுக் குளிராக்கி, குளிர்சாதனப்பெட்டி, றோணியோ இயந்திரம் கணனியும் அதனோடிணைந்த உபகரணங்களும் ஏனையவையும்) |
| C - 03 | மின் மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறி, ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீள முறுக்குதலும் |
| C - 04 | பதிப்பக வேலை (Printing) சகலவித படிவங்கள் ஏனையவை |
| C - 05 | வைத்தியசாலைக் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு இயந்திரத் திருத்தமும் பராமரிப்பும், கழிவுநீர்ப் பைப் அடைப்பு நீக்கி திருத்தம் செய்தல் |
| C - 06 | வைத்தியசாலை அலுவலர்களுக்கு பிளாஸ்டிக் அடையாள அட்டை வழங்குதல் |
| C - 07 | கட்டடத் திருத்தவேலை |

| தொகுதி இல | சேவைகள் விபரம் (வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும்) |
|---|---|
| D - 01 | சகலவிதமான வாகனத்திருத்தம், மின்சார வேலை, வாகன உட்பக்கம்,சீற் என்பவற்றிற்கு குஷன் வேலை |
| D - 02 | சகலவிதமான வாகனமும் சுத்திகரிப்பும் (Service) |

**நிபந்தனைகள்**

01. வழங்கல்கள் / சேவைகள் 2011 ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்
02. திருப்திகரமற்ற வழங்கல்கள் / சேவைகளை நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு
03. பணிப்பாளர் வெளி மூலங்களிலிருந்தும் கேள்வி கோரும் உரிமையைக் கொண்டுள்ளார்.
04. பதிவுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு
05. மேலதிக விபரங்கள் பெற விரும்பின் பணிப்பாளர் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 021 222 2261 உடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி திருமதி ப.பசுபதிராஜா
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

# யாழ் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் அமைப்பு

## இணைப்பாளராக பேராசிரியர் ஹூல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்படவுள்ள பொறியியற் பீடத்தின் இணைப்பாளராக பேராசிரியர் எஸ்.ஆர்.எச்.ஹூல் உத்தியோகபூர்வமாக நியமனம் பெற்றுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்கவால் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடம் அமைப்பதற்கான பொருத்தமான இடத்தைத் தேர்வு செய்தல், பொறியியற் பீடத்தின் இயக்கத்திற்கான தேவைகள், நிதி ஆதாரங்களை முன்மொழிதல், இந்தியாவின் நிதியுதவியைப் பெற்றுப் பீடத்தை உருவாக்கும் சாத்தியப்பாடு பற்றிய அறிக்கை தயாரித்தல் போன்ற உடனடிப் பணிகளை ஆற்றுமாறு இவரிடம் கோரப்பட்டுள்ளது.மேலும் பீடம் அமைக்கப்படும் போது ஏற்படுத்தவேண்டிய துறைசார் சிபார்சுகளும் கோரப்படுகின்றன.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா 27ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகைதரும்போது யாழ்ப்பாணப்பல்கலைக்கழகப்பொறியியற்பீட உருவாக்கத்திற்கு இந்தியா எவ்வெவ் வழிகளில் உதவமுடியுமென பேராசிரியர் ஹூல் திட்ட அமுலாக்கல் அறிக்கையை வழங்கவுள்ள தாகவும்தெரியவருகிறது. (ந)

## மிதிவெடி வெடித்து இளைஞர் படுகாயம்

மாதகல் மாந்தவத்தைப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை தவறுதலாக மிதிவெடி வெடித்ததில் படுகாயம் அடைந்த இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று காலை 8.30 மணியளவில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனப் பணியாளரான குருநகரைச் சேர்ந்த எம்.நிஷாந்தன் (வயது 22) என்பவரே படுகாயமடைந்த நிலையில்யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-2,6)





## தேவை

சிறுவர்களுக்கு சித்திரம் பயிற்ற பயிற்றுனர் தேவை.
மாதம் 2000/= வழங்கப்படும்.
கல்வித்தகைமை எதிர்பார்க்கப் படமாட்டாது.
மாநகரசபை எல்லைக்கு அருகில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
T.P.:0750441842
தொடர்பு நேரம்
மு.ப.9.00-6.00 மணி
(2889)

## 31 ஆம் நாள் துயர்பகிர்வு

21.10.2010 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது பாடசாலை ஆசிரியர் செல்வி சசிகலா கனகரத்தினம் அவர்களின் அன்புத்தாயார்

திருமதி கலாவல்லி கனகரத்தினம்

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இன்றைய நாளில் பிரார்த்திக்கின்றோம்.

யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.

(2891)


## மாதிரி விண்ணப்பப்படிவம்

### வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் – 2011

### போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்

1. நிறுவனத்தின் பெயர் :
2. நிறுவனத்தின் முகவரி :
3. தொலைபேசி இலக்கம் :
4. தொலைநகல் இலக்கம் :
5. வியாபாரப்பதிவு இலக்கம் :
6. வியாபாரத்தின் தன்மை :

| தொகுதி இலக்கம் | வழங்கல் / சேவை விபரம் |
|---|---|
| | |

01. வற் பதிவு இலக்கம்
02. மின்னஞ்சல் முகவரி

என்னால் / எங்களால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் சரியானது எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரினால் குறிக்கப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக பொருட்கள் / சேவைகள் வழங்குவதற்கு உறுதியளிக்கிறேன் / உறுதியளிக்கிறோம். ரூபா 100/= க்குரிய வங்கி வைப்புப் பற்றுச்சீட்டு இத்துடன் இணைத்துள்ளேன்/ இணைத்துள்ளோம்.

..................................................
விண்ணப்பதாரியின் ஒப்பம்

விண்ணப்பதாரியின் பெயர் : ..........................
திகதி : ..........................

(சி-1647)

# இன்று ஒரு தகவல்

## மனிதனும் பொம்மையும்

"இந்த உலகத்தில் எப்படி வாழ்வது? என்று தெரியவில்லை சேர். உங்களுக்கு ஏதாவது வழி தெரிந்தால் சொல்லுங்களேன்" என்றார் ஒருத்தர்.

நான் யோசித்தேன். சரி, என்னோடு வாருங்கள் என்று ஒரு சேர்ச்சுக்கு கூட்டிக்கொண்டு போனேன்.

அங்கே ஒரு பாதர் சனங்களுக்கு நல்ல வழிகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

அவர் சொன்ன சின்னக் கதையில் இவர் என்னிடம் கேட்ட கேள்விக்கான பதில் இருந்தது.

ஒரு ஊரில் ஒரு பெரியவர் இருந்தாராம். அவர் மக்களுக்கு நல்ல வழிகளையெல்லாம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாராம்.

எல்லோரையும் கூப்பிட்டு ஓரிடத்தில் உட்கார வைத்து சில செயல் விளக்கமெல்லாம் செய்து காட்டுவாராம்.

ஒரு நாள் அப்படித்தான் ஒரு கூட்டத்தில் அவர் பேசிக் கொண்டிருந்தார். அவருக்கு எதிரில் மேசை மீது 3 கண்ணாடி பாத்திரம் இருந்தது. அதில் சுத்தமான தண்ணீர்... மிகத் தெளிவாகக் காட்சியளித்தது.

அதே மேசையில் இன்னொரு பக்கத்தில் 3 மனித பொம்மைகள் இருந்தன. மூன்று பொம்மைகளும் மனுஷ உருவம் தான். ஆனால் அதில் ஒரு வித்தியாசம். அது என்னவென்றால்....

ஒரு பொம்மை களிமண்ணால் செய்தது.

ஒரு பொம்மை பஞ்சில் செய்தது.

இன்னொன்று சர்க்கரையில் செய்தது.

உருவம் ஒரே மாதிரித்தான். இருந்தாலும் அதனுள்ளே இருப்பது வேறுமாதிரி.

இப்பொழுது அந்தப் பெரியவர் என்ன பண்ணினார்.

முதலில் களிமண் பொம்மையைக் கையில் எடுத்தார்.

ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் அதைப் போட்டார்.

அதன்பின் பஞ்சு பொம்மையை எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டார்.

அதன்பின் சர்க்கரை பொம்மையை எடுத்து அதை இன்னொரு பாத்திரத்தில் போட்டார்.

ஆக, மூன்று பொம்மைகளையும் தெளிவான தண்ணீரில் போட்டார். எதிரில் உட்கார்ந்திருந்த சனங்களைப் பார்த்து, "இப்ப இதை எல்லோரும் நன்றாக கவனியுங்கள்" என்றார்.

கவனித்தார்கள்.

"இப்பொழுது என்ன நடக்கிறது?" என்று கேட்டார்.

களிமண் பொம்மையைப் போட்டார் அல்லவா...

அந்தப் பொம்மை தண்ணீரில் கரைந்தது.

தண்ணீர் முழுவதும் கலங்கலாக சேறாக ஆகிவிட்டது.

பஞ்சு பொம்மையைப் போட்டாரல்லவா அந்தப் பொம்மை பாத்திரத்திலுள்ள தண்ணீர் முழுவதையும் தனக்குள் உறிஞ்சி இழுத்துக் கொண்டது.

சர்க்கரை பொம்மையைப் போட்டாரே... அங்கே என்ன ஆச்சு என்றால் அந்தப் பொம்மை தண்ணீரில் கரைந்து விட்டது.

இந்த 3 பாத்திரத்தையும் சனங்களிடம் காட்டி அந்தப் பெரியவர் விளக்கம் கொடுத்தார்.

இப்பொழுது இந்தப் பொம்மையைப் பார்த்தீர்களல்லவா இந்த மூன்றும் மூன்றுவகை மனிதர்களுக்கு உதாரணம்.

களிமண் பொம்மை மாதிரி உள்ள மனிதர்கள் இந்த சமூகம் என்ற தண்ணீரில் கலக்கும் போது அவர்களும் கரைந்து விடுகிறார்கள். சமூகத்தையும் கலக்கி சேறாக்கி விடுகிறார்கள்.

பஞ்சு பொம்மை மாதிரி உள்ளவர்கள் சுயநலவாதிகள் சுற்றியிருப்பதையெல்லாம் தனக்கு உபயோகப்படவேண்டும் என்று நினைத்து உறிஞ்சுபவர்கள்.

சர்க்கரை பொம்மை மாதிரி உள்ளவர்கள் சமூகத்துக்காக தன்னையே கரைப்பதற்குத் தயாராக இருப்பவர்கள்.

இவர்களால் சமூகம் இனிப்பாக மாறுகிறது.

ஆக.... இந்த உலகத்தில் எப்படி வாழ வேண்டும் என்று கேட்டால்....

சர்க்கரை பொம்மை மாதிரி வாழ வேண்டும் அதுதான் அந்தப் பெரியவர் நமக்குச் சொல்லும் விளக்கம்.

இது மாதிரி நான் ஒரு செயல் விளக்கம் பண்ணினேன்.

ஒரு நாள் விடியற்காலையில் ஒரு நண்பர் வீட்டுக்குப் போனேன். வாக்கிங் போகும் போது அடிக்கடி அவரது வீட்டுக்குப் போவது வழ்க்கம்.

அந்த நேரம் அவர் கோப்பி குடித்து கொண்டிருந்தார்.

என்னைப் பார்த்ததும் எனக்கும் வழக்கம்போல ஒரு கோப்பி வந்தது.

பக்கத்தில் சீனி தனியாக வைத்திருந்தார்கள்.

நான் ஒரு ஸ்பூண் சீனியை எடுத்து கோப்பியில் போட்டு கலக்கினேன்.

சீனி கரைந்து விட்டது.

உடனே பேச ஆரம்பித்தேன்.

"பாருங்கள் சேர். ஒரு ஸ்பூன் சீனிதான். இருந்தாலும் அது ஒரு டம்ளர் கோப்பியில் தன்னைக் கரைத்து தியாகம் பண்ணிக் கொண்டது. கோப்பி முழுவதும் இனிப்பாக மாறியது. இதிலிருந்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

அவர் நிமிர்ந்து என்னைப் பார்த்தார்.

"இனிமேல் நீங்கள் எங்கள் வீட்டுக்கு வந்து சேர்வதற்குள் கோப்பியை குடித்து முடித்து விடவேண்டும் என்று நினைக்கிறேன்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சான்றிதழ் வழங்குதலும் ஆலயமணி பிரதிஷ்டையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களால் அன்பளிப்பு செய்யப்பட்ட ஆலயமணி இன்று வெள்ளிக்கிழமை வளாகத்தில் அமைந்துள்ள வித்தக விநாயகர் ஆலயத்தில் காலை 10 மணிக்கு பிரதிஷ்டை செய்து வைக்கப்படவுள்ளது.

அத்துடன் கல்விக் கண்காட்சியில் பங்குபற்றி வெற்றியீட்டிய உள்ளகப்பயிற்சி ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படும். எனவே இந்நிகழ்வில் சகல உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களும் பங்குகொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் "சனாதன தர்மம்-4" என்ற விடயம் பற்றி அஞ்சல் பயிற்சிப் பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் ரி.ரி சண்முக நாதன் ஆன்மீக சொற்பொழிவு ஆற்றவுள்ளார் (ஸ்ரீ-35)

# இராசி பலன்

*19.11.2010*
*(கார்த்திகை 3, வெள்ளிக்கிழமை)*
*திரயோதசி முன்னிரவு 10.22மணிவரை*
*அச்சுவினி முழுவதும்*
*இராகுகாலம் 10.39-12.09 மணி வரை*
*சுபநேரம் 6.09-7.39 மணி வரை*
*பிரதோச விரதம்.*

**மேடம்** வழிபாட்டல் ஆனந்தம் காண வேண்டிய நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவுபலித முண்டு, சொன்ன சொல்லைக் காப்பாற்ற நண்பர்கள் உதவி செய்வர்.

**இடபம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பக்குவமாகப் பேசி காரியங்கள் சாதிக்க வேண்டிய நாள், சேமிப்பு சிறிது கரையலாம்.

**மிதுனம்** இன்பங்கள் அதிகரிக்கும் நாள், எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறும்,தனவரவுகள் தாராளமாக வந்து சேரும், உத்தியோக உயர்வுண்டு.

**கடகம்** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்து கொள்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தூரதேசச் செய்தி மகிழ்ச்சியைத்தரும், தனவருவாய் திருப்தி தரும்.

**சிங்கம்** பயணத்தால் நன்மையுண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தொழிலில் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர்,பேச்சில் இனிமை தென்படும்.

**கன்னி** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை காணலாம், மறதியால் சில தொல்லைகளுக்கு அட்பட நேரிடும்.

**துலாம்** சந்தித்தவர்களால் சந்தோசம் அதிகரிக்கும் நாள், தம்பதியரிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும், திட்டமிட்ட பயணங்களை மேற்கொள்வீர்கள்.

**விருச்சிகம்** தேக நலன் உற்சாகமாக காணப் படும், பொது வாழ்வில் புகழ் கூடும், பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியம் நிறைவேறும், எதிரிகள் விலகுவர்.

**தனுசு** புத்திரர்கள் மூலம் அனுகூலம் கிடைக்கும், நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், அதிர்ஷ்டங்கள் உங்களைத் தேடிவரலாம், கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மகரம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், கௌரவமான நிலை, வெளியூர்த் தொடர்புகள் ஏற்படலாம், சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம்.

**கும்பம்** சகோதர வழி அனுகூலமுண்டு, தடைப்பட்ட காரியங்கள் கைகூடலாம், பெரியவர்கள் உங்களை விட்டு விலகுவர், பெண் தெய்வ வழிபாடு பெருமை சேர்க்கும்.

**மீனம்** எதிர்பாராத தனலாபம் இல்லம் தேடி வரலாம், இறைவழிபாடுகளில் நம்பிக்கை அதிகரிக்கும், சுப காரியப் பேச்சுக்கள் உருவாகலாம்.

வளவன்

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். முகாமையாளர் சம்மேளனமும் வடபிராந்திய இலங்கை பொறியியலாளர் சங்கமும் இணைந்து நடத்தும் "யாழ். குடாநாட்டின் வீதிப் பாதுகாப்பும், மக்களின் பங்களிப்பும் பொறுப்பும்" என்பது பற்றிய 62 ஆவது கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நல்லூர் கமநல சேவைகள் ஒழுங்கையில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பொறியியலாளர் எம். சூரியசேகரம் வளவாளராக கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளார்.

இக்கருத்தரங்கில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் படி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ)

# கல்விமாணி பட்டநெறி மாணவர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப்பட்ட நெறி மூன்றாம் வருட மாணவர்களுக்கான முக்கிய கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மூன்றாம் வருடப் பரீட்சைக்கு விண்ணப்பித்தல் மற்றும் முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் சகல மூன்றாம் வருட மாணவர்களையும் அன்றைய தினம் தவறாது சமுகமளிக்குமாறு தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# புதிய நிர்வாக சபைத்தெரிவு


(யாழ்ப்பாணம்)

வடமாகாண புற்று நோய் - எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் தலைவராக வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன், உபதலைவராக த.கனகசபை, கே.எம்.பத்மநாதன், செயலாளராக ச.குகராஜன், உப- செயலாளராக இ.மாசிலாமணி, பொருளாளராக க.நடராசா ஆகியோரும் மேலும் 10 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| மரக்கறி வகைகள் | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 70 | 60 |
| தக்காளி | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 40 |
| கோவா | 60 | 60 | 70 |
| கரட் | 50 | 80 | 60 |
| பூசணி | 50 | 40 | 50 |
| புடோல் | 40 | 50 | 50 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 130 | 100 |
| பெரிய வெங்காயம் | 110 | 120 | 80 |
| பாகற்காய் | 120 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 40 | 70 | 50 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 60 |
| பயற்றங்காய் | 100 | 120 | 140 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 100 |
| கறிமிளகாய் | 100 | 140 | 110 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 150 |
| போஞ்சி | 120 | 140 | - |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 100 | 120 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 40 |



கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி அண்மையில் கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் டயமன்ஸ் அணிவீரர்கள் விருந்தினர்களுக்கு கைலாகு கொடுத்து தம்மை அறிமுகம் செய்வதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் சம்பியனாகிய மணற்காடு சென் அன்ரனிஸ் அணிக்கு வெற்றிக் கேடயம் வழங்குவதையும் ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்ட சென் அன்ரனிஸ் வீரர் மரியதாசிற்கு பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் செயலாளர் ரி.வரதராஜன் கேடயம் வழங்குவதையும் வளர்ந்து வரும் வீரராகத் தெரிவு செய்யப்பட்ட டயமன்ஸ் வீரர் பிரதீசிற்கு கரவெட்டி விளையாட்டு உத்தியோகத்தர் பா.முகுந்தன் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-கரவெட்டி செய்தியாளர்)

## இராணுவத்தினரின் ஏற்பாட்டில் மரம் நாட்டும் நிகழ்வு

(பருத்தித்துறை)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்பு வைபவத்தை யாட்டி தென்மராட்சி பகுதிகளில் இராணுவத்தினர் மரக்கன்றுகளை நாட்டி வருகின்றனர்.

இதற்கமைய பருத்தித்துறை, கொடிகாமம் வீதியில் முள்ளி, கறுக்காய், வரணி, சுட்டிபுரம் பகுதிகளில் வீதியின் இருமருங்கிலும் படையினர் பல்வேறுபட்ட மரக்கன்றுகளை நாட்டி வருகின்றனர்.

அத்துடன் நாட்டப்படும் மரக்கன்றுகள் கால்நடைகளிடமிருந்து பாதுகாக்கும் வகையில் மரக்கன்றுகளுக்கு கூடுகளும் அமைத்து வருகின்றனர். (ஸ்ரீ-10)




## சிறுவர்கள் கலைநிகழ்வுகளில் பங்குபற்றும் வகையில் ஊக்குவிக்கப்படல் வேண்டும்

### அருட்தந்தை செபஸ்ரியன் குரூஸ் தெரிவிப்பு

(கொழும்புத்துறை)

சிறுவர்களை கலைநிகழ்வுகளில் பங்குபற்றவைத்தால் ஆளுமை உள்ளவர்களாக வளர்வார்கள். அத்தோடு கல்வியும் விளையாட்டும் சிறுவர்களுக்கு ஆரம்ப வயதில் இருந்தே புகட்டப்படல் வேண்டும் என திருவுளபணியாளர் சபை இயக்குநர் அருட்தந்தை செபஸ்ரியன் குரூஸ் அடிகள் தெரிவித்துள்ளார்.

கொழும்புத்துறை றொசாறியன் சிறுவர் கழகம் நேற்று முன்தினம் நடத்திய சிறுவர்தின விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

இன்றைய சூழலுக்கு ஏற்ற விதமாக சிறுவர்களின் கலைநிகழ்வுகள் காணப்படுகின்றன. இதில் பங்குபற்றும் சிறுவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

அப்போது தான் சிறுவர்கள் வாழ்வு மேம்படுத்தப்படும்.

க.பொ.த(சா/த) பரீட்சையில் இன்று பல மாணவர்கள் சித்தியடையாது விடுகின்றனர்.

இதனை ஆராய்ந்து பார்த்தால் முன்பள்ளியில் அவர்களுக்கான அத்திவாரம் சரியாக இடப்படவில்லை என்பது புலனாகும்.

“கலை, கல்வி, விளையாட்டு, ஆன்மீகம் ஆகியவற்றில் சிறுவர்களை ஊக்குவித்தால் உங்கள் பிள்ளைகள் மாண்புமிகு மாணவர்களாக உருவாகுவார்கள் என்பதில் ஐயமில்லை” என்றார். (ஸ்ரீ-51)

## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சியில் உள்ள பாடசாலைகளில் தரம் 9 இற்கு கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான திறன் விருத்திச் செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யா/ கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் பங்குபற்றும் ஆசிரியர்கள் கடந்த ஒக்டோபர் மாதம் 19,26,29 திகதிகளில் நடத்தப்பட்ட கணிதபாட மதிப்பீட்டுப் புள்ளிகளையும் தவறாது கொண்டு வருமாறும் இறுதிப் பகுப்பாய்வு அறிக்கை செயலமர்வின் போது தயாரிக்க இருப்பதனால் புள்ளிகளும் ஆசிரியர் வரவும் மிகவும் முக்கியமானது எனவும் வடமராட்சி வலய கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.ம. ஈஸ்வரதேவன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

## கிராமங்களுக்கு இடையிலான விழிப்புணர்வுச் செயற்பாடு

“மாற்று இனமத கலாசாரத்தை மதித்து அமைதியானதும் சமாதானத்துக்குமான வன்முறையற்ற நீதியான நல்லாட்சியை ஏற்படுத்த ஒன்றிணைவோம்” என்ற கருப்பொருளில் கிராமங்களுக்கிடையே சமய, சமூக உறவைக் கட்டியெழுப்பும் விழிப்புணர்வுச் செயற்பாட்டை கியூடெக் நிறுவனத்தினர் நடத்தி வருகின்றனர்.

இதற்கமைய, புங்குடுதீவு, நெலிஞ்சிமுனை, அல்லைப்பிட்டி, பருத்தித்துறை, ஓடக்கரை, அல்வாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கான விழிப்புணர்வுச் செயற்பாடு நேற்று அல்லைப்பிட்டி பிலிப்பு நேரியார் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

நேற்று காலை 9 மணி தொடக்கம் மாலை 5மணிவரை இவர்களுக்கான பயிற்சிகள் சமய சமூக உறவைக் கட்டியெழுப்பும் விழிப்புணர்வு செயற்பாடுகள் போன்றவற்றை கியூடெக் நிறுவன வலுவூட்டல் இணைப்பாளர் செ. ஜோசப்பாலா, சாந்திக நிறுவன உளசமூகப் பணியாளர் செல்வி லோறன்ஸ் சுதா, அருட்தந்தை லியோ ஆம்ஸ்ரோங் அடிகளார் மற்றும் யோ. ஜெஸ்ரின் ஆகியோர் நடத்தினர்.

இச்செயற்பாட்டில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-51)

## போஷாக்கு விழிப்புணர்வு கண்காட்சி

(அல்வாய்)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆத்தியடி பருத்தித்துறை ஆரம்ப சுகாதார நிலையத்தில் போஷாக்கு விழிப்புணர்வுக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி அலி மொகமட் கரூண் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா, பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் அ.அ.நடராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக தாய் சேய் நல வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி திருமதி தி.சிவசங்கர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்தியகலாநிதி மு.நந்தகுமாரன், ஆத்தியடி ஆயுர்வேத வைத்திய அதிகாரி திருமதி சிவநேசன் சறோஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வடமராட்சிப் பகுதியில் உள்ள அனைத்துப் பெற்றோர்களையும் போஷாக்கு விழிப்புணர்வு கண்காட்சியை கண்டுகளிக்குமாறு சுகாதார வைத்திய அதிகாரியின் சார்பில் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ஸ்ரீ-19)

## போரூட் நிறுவனத்தால் கடற்றொழில் உபகரணங்கள் கையளிப்பு

(பொற்பதி)

கட்டைக்காடு சென்மேரிஸ் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களில் 80 பேருக்கு போரூட் நிறுவனத்தினரால் கடற்தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் 93 ஆயிரம் பெறுமதியான 15 சூடைவலை மற்றும் 15 அறக்கொட்டியான் மற்றும் அதற்குரிய ஏனைய உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் குடத்தனை பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது. (ஸ்ரீ-64)

## வடமராட்சி முறைசாராக் கல்விப் பிரிவின் வலயமட்டக் கண்காட்சியும் விற்பனையும்

(அல்வாய்)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் முறைசாரா கல்வி பிரிவின் வலய மட்டக் கண்காட்சியும் விற்பனையும் சான்றிதழ் வழங்கலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலய முறைசாரா கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வே. இராசகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினாராக வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி சி.புஸ்பலிங்கம், கௌரவ விருந்தினராக யா/வேலாயுதம் மகா வித்தியாலய அதிபர் ச.திரவியராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கண்காட்சியை பிரதம விருந்தினர் வ. செல்வராஜா திறந்து வைக்கவுள்ளார்.

மேலும் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்களும் அன்றைய தினம் வழங்கப் படவுள்ளன. (ஸ்ரீ-19)

## சார்க் நாடுகளுக்கிடையிலான விஞ்ஞானப் போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவனுக்கு விருது

(கொழும்புத்துறை)

உலக விஞ்ஞான தினத்தை முன்னிட்டு புதுடில்லி இந்திராகாந்தி தேசிய திறந்த பல்கலைக்கழகம் யுனெஸ்கோவுடன் இணைந்து நடத்திய சார்க் நாடுகளுக்கிடையிலான விஞ்ஞானப் போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் சி.செல்வமித்திலன் விருது பெற்றுள்ளார்.

சார்க் நாடுகளிடையே நாலாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பங்குபற்றிய போட்டியில் 41 மாணவர்கள் விருது பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இம்மாணவன் இலங்கை பௌதிகவியற்கழகம் நாடளாவிய ரீதியில் நடத்திய இலங்கை பௌதிகவியல் ஒலிம்பியாட் போட்டியிலும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று தேசிய விஞ்ஞான மன்றத்தின் உலக விஞ்ஞான விழாவில் தங்கப்பதக்கத்தினை பெற்றுள்ளதோடு கடந்த 12 ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவிடம் இருந்து தொழில்நுட்பம் மற்றும் ஆய்வுக்கான விருதினையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-51)



நாவலர் வீதியில் அமைந்துள்ள முஹம்மதியா ஜும்மா பள்ளிவாசலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையில் குத்பா பிரசங்கத்தை எம்.ஐ மஹ்மூத் மௌலவி நிகழ்த்துவதையும் ஹஜ் பெருநாள் தொழுகையில் முஸ்லிம் சகோதரரர்கள் மற்றும் சகோதரிகள் ஆகியோர் கலந்து கொள்வதையும் படங்களில் காணலாம்.

## ஜனாதிபதியின் பதவிப்பிரமாணத்தை முன்னிட்டு 100 முன்னாள் புலி உறுப்பினர்கள் விடுதலை

(கொழும்பு)

ஜனாதிபதியின் இரண்டாவது பதவிப் பிரமாணத்தை முன்னிட்டு 100 முன்னாள் புலி உறுப்பினர்கள் விடுவிக்கப்படவுள்ளனர்.

இதற்கமைய பொலநறுவை, சேனபுர முகாமில் புனர்வாழ்வளிக்கப்பட்ட 100 பேர் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை விடுவிக்கப்படுவதாக சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதியின் பதவிப் பிரமாணத்தை முன்னிட்டு மேலும் 100 கைதிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் நீதி சட்ட மறுசீரமைப்புக்குச் சிபாரிசு செய்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஶ்ரீ-2)

## சன் சீ கப்பலில் பயணித்த பெண்ணின் விடுதலை இரத்து

எம்.வி.சன் சீ பயணிகளில் ஒருவரும் மூன்று பிள்ளைகளின் தாயுமான ஒருவரின் விடுதலையை கனேடிய நீதிமன்றம் நேற்று இரத்துச் செய்துள்ளது.

கனேடிய குடிவரவு மற்றும் அகதிகள் சபை இவரின் விடுதலைக்கான உத்தரவை முன்பு பிறப்பித்திருந்தது.

ஆனால் சபையின் உத்தரவுக்கு எதிராக கனேடிய அரசு இந்நீதிமன்றில் மேன்முறையீடு செய்தது. இந்நிலையிலேயே மேன் முறையீட்டை விசாரித்த நீதிபதி இப் பெண்ணை தொடர்ந்து தடுத்து வைக்க உத்தரவிட்டுள்ளார்.

ஆயினும் உத்தரவை மீளாய்வு செய்யக் கோரி 30 நாட்களுக்கு இடையில் இப்பெண் மனுத்தாக்கல் செய்ய முடியும் என்றும் இவ்வுத்தரவில் குறிப்பிட்டுள்ளார். (ஶ்ரீ-2)


# புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர் !

நிகழும் மங்கலகரமான விகிர்தி வருடம் கார்த்திகை மாதம் 3ஆம் நாள் (19.11.2010) இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 8.21 மணி தொடக்கம் 9.32 மணி வரையுள்ள அச்சுவினி நட்சத்திரமும் மகரலக்கினமும் அமிர்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்



## Saravana Tex
## சரவணா ரெக்ஸ்

தனது இரண்டாவது கிளையை
இல. 770, 772, தட்டாதெருச் சந்தி,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

எனும் முகவரியில் புதிதாக ஆரம்பிக்கவுள்ளதால் அத்தருணம் வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



குறிப்பு :- இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

இல. 770, 772, தட்டாதெருச் சந்தி,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளரும்,
ஊழியர்களும்.

தொ.பே :- 0212220421

# நடுக்கடலில் தத்தளித்த இலங்கை மீனவர்கள் தமிழகத்தில் மீட்பு

(கொழும்பு)

நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் இலங்கை மீனவர்கள் மூவரை தமிழகம், நாகை பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் சிலர் காப்பாற்றியுள்ளதாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

திருகோணமலையைச் சேர்ந்த மதிவதனன் (வயது -42), விநாயகமூர்த்தி (வயது-55) மற்றும் கணேஷ் (வயது -44) ஆகிய மூன்று இலங்கை மீனவர்களுமே இவ்வாறு நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் காப்பாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பைபர் படகொன்றின் மூலம் மீன்பிடித்துக் கொண்டிருந்த இவர்களின் படகு பழுதடைந்த நிலையிலேயே கடும் காற்று காரணமாக திசைமாறி கோடியக்கரை பகுதியில் கரை ஒதுங்கியுள்ளது.

இந்நிலையில் இவர்களை கண்ட நாகை மீனர்வகள் வேதாரண்யத்திற்கு அழைத்து வந்து மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

இம் மீனவர்களிடம் தொடர்ந்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# இந்திய வெளியுறவு அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும்

## இரா. சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் 25ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணாவுடன் விசேட பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

போரின் பின்னரான இலங்கையில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இந்த சந்திப்பின் போது விசேட கவனம்செலுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு தற்போதைய அரசாங்கத்தை அதிகளவில் தூண்டும் வகையில் இந்தப் பேச்சுவார்த்தைகள் அமையப் பெறும் எனவும் வடக்கு மக்களின் ஜீவானோபாயத்தை மேம்படுத்துவது குறித்து இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்படவுள்ள இந்திய கொன்சோல் காரியாலயத்தின் மூலம் வடக்கு -கிழக்கு மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளின் உண்மை நிலைமையை அறிந்து கொள்ளமுடியும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் குறித்தும் அடுத்த கட்டமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வார இறுதியில் கூடி ஆராயவுள்ளனர்.

பம்பலப்பிட்டியிலுள்ள கட்சியின் அலுவலகத்தில் நாளை சனிக்கிழமை 3 மணிக்கு இக்கூட்டம் ஆரம்பமாகிறது.தொடர்ந்து மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிக்கும் இடம்பெறவுள்ளது.

இதற்கான அழைப்புகள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்டதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஸ்ரீ-2)

# நாடு கடந்த தமிழீழ இராச்சிய நடவடிக்கைகளை அனுமதிக்கவேண்டாம்

## வெளிநாடுகளிடம் இலங்கை அரசு கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் நாடு கடந்த தமிழீழ் இராச்சிய நடவடிக்கைளை அனுமதிக்க வேண்டாம் என அரசாங்கம் வெளிநாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக வெளிவிகார அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க வேண்டாம் என இலங்கை அரசாங்கம் வெளிநாடுகளிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளதுடன் நாடு கடந்த தமிழீழ இராச்சியத்தை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வில்லை எனவும் மேலும் ஏனைய நாடுகளும் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்றும் அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்படும் அரசியல் நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டிய அவசியமில்லை எனவும் பல நாடுகளில் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

நாடு கடந்த தமிழீழ இராச்சியத்தின் அமைச்சரவை அண்மையில் அறிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து வெளிவிவகார அமைச்சு உலக நாடுகளிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

அத்துடன் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்திற்கு எதிராகப் புலிகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு சில நாடுகள் வழங்கி வரும் ஆதரவு பெரும் அதிருப்தி ஏற்படுத்துவதாக இலங்கை அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஸ்ரீ-2)



கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோரால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்ட "பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்" என்ற நூலின் அறிமுகவிழா நேற்று முன்தினம் நல்லூர் கம்பன்கோட்டத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கம்பவாரிதி இ.ஜெயராஜ், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் க.இரகுபரன், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அதிபர் சிவமலர் அனந்தசயனன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்.

# அரச ஊழியர்களுக்கான சம்பளத்தை உயர்த்தினால் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முடியாது

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

சம்பள உயர்வினை வழங்கினால் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முடியாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வரவு - செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கினால் பாரியளவு அபிவிருத்தித் திட்டங்கள் ஸ்தம்பிதமடையும் எனவும் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை 100 ரூபாவினால் உயர்த்தினால் கூட மாதாந்தம் 1.4 பில்லியன் ரூபா செலவாகும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசாங்கத்தின் மொத்த வருமானம் 800 பில்லியன் எனவும், இதில் 500 பில்லியன் அரசாங்க ஊழியர்களின் சம்பளங்களுக்காக ஒதுக்கப்படுவதாகவும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற பாரிய அபிவிருத்தித் திட்டங்களை இடைநிறுத்தக்கூடாது என தொழிற்சங்கத் தலைவர்கள் தம்மிடம் கோரியதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை வரவு -செலவுத் திட்டமானது பாரியளவு அபிவிருத்தித் திட்டங்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படவுள்ளதாவும் அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# அம்பாந்தோட்டை துறைமுகம் திறந்து வைக்கப்பட்டது

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாகம்புர சர்வதேச துறைமுகம் நேற்று திறந்துவைக்கப்பட்டதையடுத்து முதலாவது கப்பல் நங்கூரமிட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ் விசேட நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்டார்.

அம்பாந்தோட்டை - மாகம்பர சர்வதேச துறைமுகத்தின் முதலாவது கட்ட நிர்மாணப் பணிகளின் நேற்று நிறைவடைவதுடன் ஜெற் லைன் என்ற பெயர் கொண்ட கப்பல் துறைமுகத்தை வந்தடைந்தது.

இதனைத் தொடர்ந்து பாய்மரக் கப்பலொன்றும் பின் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கான பொருட்களை ஏற்றிய சரக்குக் கப்பலொன்றும் துறைமுகத்தில் நங்கூரமிட்டன.

இந்நிகழ்வில் துறைமுக விமான சேவைகள் பிரதி அமைச்சர்களான தயாசிறி திசேரா மற்றும் ரோஹித அபேகுணவர்த்தன ஆகியோருடன் சபாநாயகர் சமல் ராஜபகஷ, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு தூதுவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இத்துறைமுகம் 1700 ஹெக்டேயர் பரப்பில் 390 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு தற்போது இதில் மூன்று கப்பல்களை நங்கூரமிடக்கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# சிறை மட்டும்தான் தமிழனுக்கு மிச்சம்!

சீமானுக்கு முன்னால் எப்போதும் நான்கைந்து செல்போன்கள் கிடக்கும் "என்தேசத்தில் முளைத்த சூரியனே... பிரபாகரா","தாயகக்கனவிலே சாவினைத் தழுவிய சந்தனப்பேழைகளே..." என்று அழைப்பு மணி ஓசை அடித்தபடியே இருக்க , "கொஞ்சம் தடத்தில் இருங்க தம்பி" என்று அடுத்தடுத்த செல்போன்களில் பேசியபடியே இருப்பார். இப்போது எதுவும் இல்லை.வேலூர் சிறைச்சாலையில் தேசிய பாதுகாப்புச்சட்டத்தில் நான்கு மாதங்களுக்கும் மேலாக அடைபட்டுக்கிடக்கிறார்."எங்கள் மீனவனை அடித்தால்,உங்கள் மாணவனை அடிப்போம்" என்ற சீமானின் பேச்சு, அவரை சிறைப்படுத்தி விட்டது. சிறைக்குள் எப்படி இருக்கிறார் சீமான்? அவரது வழக்கு நிலவரம் என்ன? சமீபத்தில் சீமானை வேலூர் சிறையில் சந்தித்து திரும்பிய வழக்கறிஞர்கள் சிலரிடம் பேசினோம்.

"கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது இதேபோன்று தேசிய் பாதுகாப்பு சட்டத்தில் சீமான் கைது செய்யப்பட்டார். சீமான் மட்டும் இன்றி,கொளத்தூர் மணி,நாஞ்சில் சம்பத் போன்ற வர்களும் இதே சட்டத்தில் கைது செய்யப்பட்டனர்.

சிறிது காலத்திற்கு பின்னர்,தே.பா.சட்டம் பாய்ச்சப்பட்டது தவறு என மூவரையும் நீதிமன்றம் விடுதலை செய்யது. இப்போதும் கூடவழக்கு விசாரணைக்கு வந்தால்,மிக எளிதாக சீமானை விடுவித்துவிட முடியும். ஆனால் அரசுத்தரப்பில் பதில் மனுத்தாக்கல் செய்ததோடு விட்டுவிட்டார்கள். இதனால், சீமானின் வழக்கு விசாரணைக்கு வருவது தள்ளிப்போய்க்கொண்டே இருக்கிறது. நான்கு மாதங்களாக இது தான் நடக்கிறது. நாங்கள் சீமானைச் சந்தித்தபோது,இதைப்பற்றி மிகுந்த வேதனையுடன் பேசினார்.

"இராமேஸ்வரத்தில் தாக்கப்படும் மீனவத் தமிழனுக்காகத்தான் நான் பேசினேன். நான் பேசியதில் என்ன பிழை? இரண்டு நாட்களுக்கு முன்பு கூட இராமேஸ்வரத்து மீனவர்களை நடுக்கடலில் வழிமறித்து, வலைகளை அறுத்து,பிடித்த மீன்களை கடலில் கொட்டி, அடித்துத்துரத்தியுள்ளனர் இலங்கை கடற்படையினர்.


இதுவரை 500க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கொல்லப்பட்டுள்ளனர். ஒரே ஒரு முறைகூட நமது மீனவர்களை காப்பாற்ற இந்திய இராணுவம் முயற்சி செய்தது இல்லை. அப்படியானால்,நீங்கள் பாதுகாப்புப் பணி செய்யப் போனீர்களா? இல்லை, பல்லாங்குழி ஆடப்போனீர்களா? இதைப் பேசினால் இறையாண்மை கெட்டுவிடுமா?

இங்கு தமிழனுக்கு என்று எதுவும் இல்லை. நாங்கள் ஓணம் பண்டிகைக்கு விடுமுறை விடுகிறோம்.

உகாதிக்கு விடுமுறை விடுகிறோம்.எங்களுடைய தமிழ்ப்புத்தாண்டு தை முதல் நாளன்று,ஏன் கேரளாவிலும் ஆந்திராவிலும் விடுமுறை விடுவதில்லை? இதைக்கேட்பது தமிழ் தீவிரவாதமா? எவன் எல்லாம் தமிழர்களுக்கு எதிராக இருக்கிறானோ, அவன் எல்லாம் இந்திய தேசத்திற்கு உண்மையானவன்,இந்தியாவை மதிப்பவன் எவன் எல்லாம் தமிழைப்போற்றுகிறானோ, அவன் எல்லாம் தமிழ்த்தீவிரவாதியா?

நான் காவிரி நதி நீரில் பங்குகேட்பது தேசிய ஒருமைப்பாட்டுக்கு எதிரானதாம். அவன் நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி "காவிரி நீரை தரமாட்டோம்" எனச் சொல்வது மட்டும் தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஆதரவானதா? 'முல்லைப்பெரியார் அணையை உயர்த்த வேண்டும்' எனச் சொல்வது இறையாண்மைக்கு எதிரானதாம்.

ஆனால்,"இன்னொரு அணையை கட்டுவோம்"எனச்சொல்வது இறையாண்மைக்கு பாதுகாப்பானதா? அப்படியானால் , எப்போதுமே இறையாண்மை என்பதும், தேசியம் என்பதும் தமிழர்களுக்கு மட்டும் எதிரானது தானா?



ஆந்திராவில் காங்கிரஸ் ஆள்கிறது. மகாராஷ்டிராவையும் காங்கிரஸ் ஆள்கிறது. உண்மையிலேயே இந்த நாட்டில் தேசியம் இருப்பது உண்மையானால், மகாராஷ்டிராவின் முதல்வரை ஆந்திராவுக்கும், ஆந்திராவின் முதல்வரை மகாராஷ் டிராவுக்கும் மாற்றி ஆளவைக்க முடியுமா? ஒரே கட்சி... ஒரே... தேசம். முடியுமா? முடியாது! ஏனென்றால் ,இந்தத் தேசம் அடிப்படையில் மொழி வாரியாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. எல்லா மொழி வாரித்தேசிய இனங்களையும் அந்தந்த மண்ணைச் சேர்ந்த மக்கள் மட்டுமே ஆண்டிருக்கிறார்கள், தமிழ் நாட்டைத் தவிர!

அன்று திராவிடக் கட்சிகளை, தேசிய கட்சியான காங்கிரஸ் எப்படி வளர விடாமல் அடக்கி ஒடுக்கியதோ, அப்படி இன்று தேசிய கட்சிகளும், திராவிடக்கட்சிகளும் சேர்ந்து எங்களை நசுக்குகின்றன. தமிழன் ஒரு தனித்த தேசிய இனம், அவனுக்கு என்று ஓர் இறையாண்மை இருக்கிறது என்பதை தமிழனே இன்னும் உணரவில்லை.

"இவன் சாதிகளாகப் பிரிந்து கிடக்கிறான். சிறைச்சாலை மட்டும் தான் தமிழனுக்கு விதிக்கப்பட்ட இடமாக,வேறு யாராலும் பறிக்கப்படாத இடமாக மிஞ்சியிருக்கிறது" என்று கோபம் வெடிக்கப்பேசிய சீமானைப் பார்க்கும்போது, அவர் இருக்கும் இடம்தான் சிறையே தவிர,சிந்தனையில் எந்த மாற்றமும் இல்லை என்பது புரிந்தது.

அரசியல் கைதிகளுக்கான அறை சீமானுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிறது. தினமும் அதிகாலையில் எழுந்து உடற்பயிற்சி செய்கிறார். உள்ளுக்குள் இருக்கும் கைதிகளுடன் அரசியல் பேசுகிறார். சிறைக்குள் செய்தித்தாள்கள்,வார இதழ்கள் அனைத்தும் வந்துவிடுவதால், அனைத்தையும் படித்துவிடுகிறார்.

எங்களிடம் இயக்குநர் தங்கர்ப்பச்சான் குறித்து மிகுந்த கடுப்போடு பேசிய சீமான்,"தன்னுடைய சொந்த வேலையாக முதலமைச்சரைப் பார்த்துவிட்டு,நான் ஏதோ விடுதலைக்குப் பிச்சை கேட்பது போன்ற தோற்றத்தை வெளியில் உண்டாக்கி விட்டார்" என்று ரொம்பவும் கோபப்பட்டார் என்ற வழக்கறிஞர்களிடம், "வரப்போகும் சட்டமன்றத் தேர்தலில் சீமானின் நிலைப்பாடு என்ன? அதைப்பற்றி எதுவும் சொன்னரா?" என்று கேட்டோம்.

"கேட்டோம் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை பொது எதிரி காங்கிரஸ் என்பதில் உறுதியாக இருக்கிறார். காங்கிரசை வீழ்த்துவது மானமும்,சுய மரியாதையும் உள்ள தமிழர்களின் கடமை என்ற சீமான்,நாம் தமிழர் இயக்கத்தினரை இப்போது காங்கிரசுக்கு எதிரான தேர்தல் வேலைகளுக்கு முடுக்கிவிட்டு இருக்கிறார்" என்றார்கள்.

ஆனந்த விகடன்









அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் பொன்விழா சைவ மாநாடு நேற்று முன்தினம் வண்ணை நாவலர் மகாவித்தியாலத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன், அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை, நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# வங்காள படம் இயக்கும் சிங்கள திரைப்பட இயக்குநர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் அரசுக்கும் இடையிலான போரை மையப்படுத்தி கடந்த காலங்களில் திரைப் படங்கள் பலவற்றையும் இயக்கிய இலங்கையின் பிரபல திரைப்பட இயக்குநர் விமுக்தி ஜயசுந்தர வங்காள மொழியில் திரைப்படம் ஒன்றை இயக்கவுள்ளார்.

இவர் யுத்தத்தால் பலிக்கடா ஆக்கப் பட்டவர்களின் வாழ்க்கையை வெளிப்படுத்தும் வகையில் ' The Land of Silence ' என்கிற ஆவண திரைப்படம் ஒன்றை இயக்கியுள்ளார்.

இத் திரைப்படம் சர்வதேச திரைப்பட விழாக்களுக்கு தெரிவாகி இருந்தது. 'Between Two Worlds' என்கிற இவரது மற்றொரு திரைப்படம் கல்கத்தா திரைப்பட விழாவில் கடந்த 16ஆம் திகதி திரையிடப் பட்டது.

அப்போதே அவர் இத்தகவலை வழங்கினார். வங்காளத் திரைப்பட இயக்குநர்களான சத்ஜ ஜித்திரே, றிற் விக் கடக் ஆகிய ஜாம்பவான்களை கௌரவிக்கும் வகையில் வங்காள மொழியில் அடுத்த திரைப்படத்தை இயக்கவிருப்பதாக அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# வலுவான எதிர்க்கட்சி ஒன்றை உருவாக்குவதன் அவசியம் எழுந்துள்ளது

## சஜித் பிரேமதாச எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

வலுவான எதிர்க்கட்சி ஒன்றை உருவாக்குவதன்மூலம் ஜனநாயக விரோத செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஜனநாயக அழிவிலிருந்து மக்களை மீட்டெடுக்கக் கூடிய ஓர் எதிர்க்கட்சியின் அவசியம் வெகுவாக எழுந்துள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மக்களை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதனை முதன்மையாகக் கொண்டு செயற்பட வேண்டிய நேரத்தில் அரசாங்கம் 18 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி ஜனநாயக விரோத செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் சூதாட்ட சட்டத்தின் மூலம் நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களுக்காக குரல் கொடுக்கக்கூடிய ஓர் வலுவான எதிர்க்கட்சியின் அவசியம் வெகுவாக எழுந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# அவுஸ்திரேலிய எம்.பி.க்களிடம் பொன்சேகாவின் கட்சி முறைப்பாடு

(கொழும்பு)

ஜெனரல் சரத்பொன்சேகாவின் ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து இலங்கையில் இடம்பெற்றுவரும் ஜனநாயக விரோத செயற்பாடுகள் குறித்து விளக்கமளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வாரம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான அர்ஜுன ரணதுங்க மற்றும் அனுரகுமார திஸநாயக்கா ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

அவுஸ்திரேலியாவின் சிட்னி பகுதியில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களுமான பீற்றர் பிறிம்றோஸ் மற்றும் நாதன் றீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் ஜனநாயகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என அவுஸ்திரேலியாவில் போராடிவரும் சிங்கள இன மக்களின் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)





கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற ஆங்கில தின விழாவில் தென்மராட்சி வலய ஆங்கில ஆசிரிய ஆலோசகர் திருமதி சி.ஏ.திருக்குமார் உரையாற்றுவதையும் மாணவர்களின் கலைநிகழ்வையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி வலய ஆங்கிலக் கல்விப் பணிப்பாளர் வி.ஸ்ரீதரன், பாடசாலை அதிபர் திருமதி லலிதமலர் முகுந்தன், ஆங்கில ஆசிரிய ஆலோசகர் உள்ளிட்ட பார்வையாளர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# முக அழகு, கூந்தலழகு, உடலழகு பெற்றிட மூலிகை பாவனை குறிப்புக்கள்

(நேற்றையதொடர்ச்சி)

**வியர்வை நாற்றம் நீங்க**

✦ ஆவாரம்பூக்களை நன்றாக உலர்த்தி சம அளவு பயற்றம்மா கலந்து அரைத்து தினமும் தேய்த்து குளித்து வந்தால் வியர்வை நாற்றம் தீரும்.

✦ தேவையான அளவு பயற்றம் மாவையும், ஊறவைத்த வெந்தயத்தையும் கலந்து அரைக்கவும். அத்துடன் கொஞ்சம் வேப்பங்கொழுந்து, துளசி, திருநீற்றுப் பச்சிலை, இலைகளை சேர்த்தரைத்து உடலில் பூசி குளிக்க, வியர்வை நாற்றம் அகலும்.

✦ மருதோன்றி இலை -100 கிராம், மருதோன்றி பூ- 100 கிராம், கஸ்தூரி மஞ்சள் -40 கிராம் இவை மூன்றையும் தூளாக்கி வெந்நீரில் குழம்புபோல கதைத்து உடலெங்கும் பூசிக் குளிக்க வியர்வை நாற் றம் அகலும்.

✦ உலர்ந்த ரோசா இதழ்கள், மகிழம்பூ, கோரைக்கிழங்கு, வெட்டிவேர், பூலாங் கிழங்கு, சந்தனக் கட்டை இலைகளை சமனாக எடுத்து உலர்த்தி, பொடித்து, தூள் செய்து, உடலில் பூசி 15 நிமிடங்கள் சென்ற பின்பு குளிக்க உடலில் வீசும் கெட்டவாடை விலகி நறுமணம் கமழும்.

✦ நெல்லிவற்றல் (உலர்ந்த நெல்லிக் கனி) -1 கிலோ

சீயாக்காய் -1/2 கிலோ
பூலாங்கிழங்கு-1/4 கிலோ
வெந்தயம்-1/4 கிலோ
ஆவாரம்பூ -1 கிலோ
கடலைமா -1கிலோ
வெட்டிவேர் - 1/4 கிலோ

இவைகளை ஒன்றாக நிழலில் உலர்த்தி, ஒன்றாகக் கலந்து இடித்து, அரித்து நுண்ணிய பொடியாக சேமித்துக் கொள்ளவும். வாரம் ஒருநாள் புழுங்கலரிசி வடித்த கஞ்சியில் குழைத்து கூந்தலுக்கு தேய்த்து 15 நிமிடம் ஊறியபின் தலைமுழுகி வர செழுமையாகவும் கருமையாகவும் கூந்தல் வளரும்.

கஸ்தூரி மஞ்சள் -100 கிராம்
வெட்டிவேர் 1-00 கிராம்
செண்பகவேர் -100 கிராம்
இச்சிலிக்கிழங்கு -100கிராம்
பூலாங்கிழங்கு -100கிராம்
கோரைக்கிழங்கு -100 கிராம்
கார்போகரிசி -100 கிராம்
மகிழம்பூ -100 கிராம்
ரோசா இதழ் -100 கிராம்

மேற்கண்ட 10 பொருட்களையும் ஒன்றாகக் கலந்து உலர்த்தி, மிஷினில் கொடுத்த ரைத்து வைத்துக் கொள்ளவும். தினசரி காலையில் குளிக்கும்போது உடல் முழுக்க பூசிக் குளித்தால் உடல் மணக்கும். மேனி மினு மினுக்கும். கோடை காலத்திற்கு ஏற்ற குளியல் பொடியாகும்.

**நகங்களில் ஏற்படும் பங்கஸ் தொற்றுக்கு , மருதாணி பூச்சுமுறை:**

✦ நிழலில் உலர்த்திய மருதாணி இலைகளை பொடியாக்கி மெல்லிய துணியில் நுண்ணிய பொடியாக அரித்து 100 கிராம் பொடியை, ஒரு சிறிய பாத்திரத்தில் 1/2 டம்ளர் தண்ணீரை கொதிக்க வைத்து, 1/2 தேக்கரண்டி தேயிலைப் பொடியை போட்டு மீண்டும் கொதிக்கவைத்து, அதில் சிறிது எலுமிச்சம்பழச்சாறு விட்டு மேலும் சில நிமிடங்கள் கொதிக்கவைத்து, வடிகட்டி அதில் மருதாணிப் பொடியை கொஞ்சம் கொஞ்சமாகக் கலந்து, 10 சொட்டு யூகாலிப் டெஸ் தைலத்தை கலந்து வைத்துக் கொள்வதே மருதாணி பசையாகும். இதை நகங்களிற்கு தடித்த பற்றாக பூசி 3 மணி நேரம் கழித்து தண்ணீரில் கழுவாமல் சுரண்டி எடுத்துவிட்டு, கொஞ்சம் தேங்காயெண்ணெயை பூசி விடவும். இதனால் நகங்களில் பங்கஸ் தொற்று வராமல் தடுப்பதுடன் நகங்களும் அழகாக பராமரிக்கப்படும்.

✦ சோற்றுக் கற்றாழை மடலை எடுத்து மேற்றோலையும் கரையில் காணப்படும் முள் போன்ற அமைப்பையும் சீவி அகற்றி உள்ளிருக்கும் Jel போன்ற பகுதியை நன்றாக நீரில் கழுவி 5 கிராம் அளவு சர்க்கரையில் கலந்து தினமும் ஒரு துண்டு சாப்பிட்டு வர மலமும் நன்கு இளகி வெளியாவதுடன் தோலும் நல்ல பளபளப்பை பெறும். கற்றாழைச்சாற்றை உடல் முழுவதும் பூசி 1/2 மணிநேரம் ஊறிய பின்பு குளித்து வந்தாலும் வியர்வை நாற்றம் நீங்கும். சருமம் பளபளப்பை அடையும்.

நம் நாட்டில்தான் பருவத்திற்கேற்ற பழவகைகளும், பருவத்திற்கேற்ற இலை காய் கறிகளும், மண்ணிற்கேற்ற தானியங்களும் விளைகின்றன. இலைகளை அந்தந்த காலத்தில் தேவையான அளவு தினமும் பயன்படுத்தினால் அக அழகையும் சேர்த்துப் பேணமுடியும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

மேற்குறிப்பிட்ட குறிப்புகளுக்கு தேவையான உலர் மூலிகைப் பாகங்களை தமிழ் மருந்துக் கடைகளில் பெற்றுக் கொள்ள முடியும். (முற்றும்)







அடுத்த வருடம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மனைப்பொருளியல் புதிய பாடத்திட்டம் சம்பந்தமான செயலமர்வு நேற்று முன்தினம் யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் யாழ். கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் செல்வி.தி.யோகேஸ்வரி செயலமர்வை நடத்துவதையும் செயலமர்வில் பங்குபற்றி ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :-என்.குமார்)

# ஊடக அதிகார சபை ஒன்று உருவாக்கப்படவுள்ளது

(கொழும்பு)

இலங்கையில் ஊடக அதிகார சபை ஒன்று உருவாக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. *

ஊடகவியலாளர்களுக்கும் ஊடக நிறுவனங்களுக்கும் வழி காட்டும் நோக்கில் இந்த விசேட அதிகார சபை நிறுவப்படவுள்ளதாகவும் தேசிய ஒலிபரப்பு அபிவிருத்தி அதிகார சபை ஒன்று நிறுவுவது தொடர்பான திட்ட வரைபுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஊடகங்களுக்கு வழிகாட்டும் வகையில் இந்த விசேட அதிகார சபை உருவாக்கப்படவுள்ளதாக ஊடக அமைச்சின் செயலாளர் டபிள்யூ.பி.கணேகல குறிப்பிட்டுள்ளார்.

உயர் கல்வியைத் தொடரும் ஊடகவியலாளர்களுக்கு கல்விச் செலவுகளை பொறுப்பேற்பதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஊடகவியலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது குறித்தும் ஆராயப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அமைச்சர்கள் வெளிநாடு செல்வதற்குத் தடை

(கொழும்பு)

வரவு- செலவுத்திட்ட விவாதம் நடைபெறும் காலத்தில் அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களோ அல்லது அமைச்சர்களோ வரவு - செலவுத்திட்ட விவாதம் நடைபெறும் காலத்தில் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள முடியாது என உத்தரவிடப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 22ஆம் திகதி மாலை நாடாளுமன்றில் வரவு- செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கவுள்ளார்.

மேலும் வரவு-செலவுத்திட்ட விவாதம் எதிர்வரும் 23ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 10ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

வரவு-செலவுத்திட்ட விவாதம் நடைபெறும் காலப்பகுதியில் உறுப்பினர்கள் அவையில் பிரசன்னமாகியிருக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# போலி ரூபாய் நோட்டுக்களின் புழக்கம் அதிகரித்துள்ளது

(கொழும்பு)

வவுனியா, மன்னார் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் அண்மைய நாட்களில் போலி ரூபாய் நோட்டுக்களின் புழக்கம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பண நோட்டுக்களில் 500 மற்றும் ஆயிரம் ரூபாய் போலி நோட்டுக்கள் புழக்கத்தில் உள்ளதாகவும் பொலிசார் இவற்றை வைத்திருந்த சிலரை இம் மாவட்டங்களில் இருந்து கைது செய்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

மேலும் வவுனியா மாவட்டத்தின் செட்டிக்குளம் பொலிஸ் நிலைய பொலிசாரால் நேற்று முன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் வவுனியாவில் உள்ள அரச வங்கி ஒன்றில் போலி ஆயிரம் ரூபாய் நோட்டு ஒன்றை வைப்பில் இட முயன்ற போது இக்கைது இடம் பெற்றுள்ளது.

வங்கியின் உதவி முகாமையாளர் ஒருவரே பொலிசாருக்கு தகவல் வழங்கியுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப்புலனாய்வு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத்தொடரில் இன்று வெள்ளிக்கிழமை காலை10.30 மணியளவில் தேவி பாகவதம் என்னும் விடயம் பற்றி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-35)




# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1493- கொலம்பஸ் முதல் நாள் தான் கண்ட தீவின் கரையை அடைந்து அதற்கு சான் ஜுவான் பட்டீஸ்டா எனப்பெயர் சூட்டினார்.
- 1794- அமெரிக்கப் புரட்சிப்போரின் பின்னர் எழுந்த சில பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு ஐக்கிய அமெரிக்காவுக்கும் பிரித்தானியாவுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1816- வார்சா பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 1881- உக்ரேனில் ஒடீசா நகரில் விண்கல் ஒன்று வீழ்ந்தது.
- 1932- சோவியத் தலைவர் ஜோசப் ஸ்டாலினின் இரண்டாவது மனைவி தனது வீட்டில் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.
- 1941- இரண்டாம் உலகப்போர்: மேற்கு அவுஸ்திரேலியாவில் HMAS சிட்னி மற்றும் HSK கோர்மொரன் என்ற போர்க்கப்பல்களுக்கிடையில் நிகழ்ந்த மோதலில் இரண்டும் மூழ்கின.இதில்645 அவுஸ்திரேலியக் கடற்படையினரும் 77 நாசி ஜெர்மனியக் கடற்படையினரும் கொல்லப்பட்டனர்.
- 1942- இரண்டாம் உலகப்போர்: ஸ்டாலின் கிராட் சண்டை- சோவியத் படையினர் ஸ்டாலின் கிராட் நகர் மீது மீள் தாக்கு தலை ஆரம்பித்தனர்.இது பின்னர் அவர்களுக்கு வெற்றி கிடைத்தது.
- 1946- ஆப்கானிஸ்தான்,ஐஸ்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் ஐ.நா.வில் இணைந்தன.
- 1969- அப்பலோ 12 விண்கலத்தில் சென்ற சார்ள்ஸ் கொன்ராட், அலன்பீன் ஆகியோர் சந்திரனில் இறங்கி நடந்த மூன்றாவது, நான்காவது மனிதர்கள் என்ற பெயரினைப் பெற்றனர்.
- 1969- பிரேசில் உதைபந்தாட்ட வீரர் பெலே தனது ஆயிரம் கோலைப் பெற்றார்.
- 1977- எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் அமைதிப்பேச்சுக்களுக்காக இஸ்ரேல் சென்றடைந்தார். இஸ்ரேல் சென்ற முதல் அரபுத் தலைவர் இவரே.
- 1977- போர்த்துக்கல் போயிங் விமானம் ஒன்று மெடெய்ரா என்ற இடத்தில் விபத்துக்குள்ளாகியதில் 130 பேர் கொல்லப்பட்டனர்.
- 1984- இலங்கை இராணுவத்தின் வட மாகாணத் தளபதி பிரிகேடியர் ஆரியப்பெரும யாழ்ப்பாணத்திலுள்ள கட்டுவன் என்ற இடத்தில் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டார்.
- 1984- மெக்சிக்கோ நகரில் எண்ணெய்க் குதங்களில் ஏற்பட்ட பெரும் வெடிப்புக்களினால் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 500 பேர் கொல்லப்பட்டனர்.
- 1985- பனிப்போர்: அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் ரேகன், சோவியத் ஜனாதிபதி மிக்கைல்கொர்பச்சோவ் இருவரும் ஜெனிவாவில் முதன்முறையாகச் சந்தித்தனர்.
- 1991- தமிழீழ காவல்துறை நிறுவப்பட்டது.
- 1999- மக்கள் சீனக்குடியரசு தனது முதலாவது சென்ஷோ விண்கலத்தை ஏவியது.
- 2005- மகிந்த ராஜபக்ஷ இலங்கையின் 6ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

### பிறப்புக்கள்

- 1831- ஜேம்ஸ் கார்ஃபீல்ட், ஐக்கிய அமெரிக்காவின் 20 ஆவது ஜனாதிபதி (இ.1881)
- 1835- ராணி இலட்சுமிபாய், இந்திய ராணி (இ.1858)
- 1909- பீட்டர் டிரக்டர், அவுஸ்திரேலிய மேலாண்மை அறிவியலாளர் (இ.2005)
- 1925- சலில் சௌதுரி, வங்காள இசையமைப்பாளர் (இ.1995)

### இறப்புக்கள்

- 1998- டெட்சுயா ஃபுஜித்தா, ஜப்பானிய வானிலை அறிஞர் (பி.1920)
- 2008- எம்.என்.நம்பியார், நடிகர் (பி.1919)



**1917- இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி பிறந்த தினம் (இ.1984)**

# 21 ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

21ஆம் திகதியில் பிறந்தவர்கள் பெரும்பாலும் இரட்டை மனமும் குணமும் கொண்டவர்களாக இருப்பார்கள். 1ஆம் எண்ணின் தன்மையும் 2ஆம் எண்ணின் தன்மையும் இவர்களுக்கு மாறி மாறிச் செயல்படும். கூட்டு எண்ணான 3இன் தன்மை சற்று குறைவாகவே வெளிப்படும். எதையும் யோசிக்காமல் செயற்பட்டு வருந்தும் நிலையை அடிக்கடி சந்திக்கக்கூடும். சில தேவையற்ற செயல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதன் விளைவாக இன்னலைச் சந்திப்பார்கள். எப்படியும் பேச்சு சாமர்த்தியத்தால் சமாளிக்கும் தன்மை உடையவர்களாதலால் சில நேரங்களில் வெற்றி பெற்று விடுவார்கள். இரண்டு விதமான தன்மையுடைய எண் என்பதால், வாழ் வில் ஏற்றமும் இறக்கமும் ஏற்படும். இவர்களின் தொழில் எண்கள் 1, 2தொழில் உதவி எண் 6.

இவர்கள் பெரும்பாலும் கல்வி, கஜானா, வங்கி போன்ற துறைகளில் அதிகம் இருப்பார்கள். இவர்கள் மனம் சொல்வதையே செய்யும் தன்மை உடையவர்கள். மனதில் நினைத்ததை செயல்படுத்தும் குணமும் அதிகம் காணப்படும். இதனால்தான் சிலர் சிக்கலில் தவிக்கும் நிலை உண்டாகிறது. இதற்குக் காரணம் பிறந்த திகதி எண்களே தொழில் எண்களாக அமைந்ததுதான். தொழில் உதவி எண்ணான 6இன் ஆதிக்கத்தைப் பொறுத்துதான் வளர்ச்சி அமையும். தொழில் எண்கள் 1, 2இன் ஆதிக்கம் நன்றாக அமைந்து, 6-ஆம் எண்ணின் ஆதிக்கம் குறைவாக இருந்தால் அடிக்கடி சண்டை-சச்சரவுகள், துறை ரீதியான சிக்கல்களில் சிக்கித் தவிப்பார்கள். 1 மற்றும் 2ஆம் எண்களில் ஏதேனும் ஒன்றின் ஆதிக்கமும் தொழில் நட்பு எண் 6இன் ஆதிக்கமும் நன்றாக அமையப் பெற்றால், முயற்சி மற்றும் வெற்றி என்பது சுலபமாகக் கிடைக்கும் நிலை உண்டாகும். எப்போதும் இவர்கள் மற்றவர்களுக்கு நல்வழி காட்டுவது போல் தோன்றினாலும் முடிவில் சுய நலம் இருப்பதை அறியலாம். இதனால் தான் இவர்களுக்கு எதிரிகளும் உண்டாகி விடுகிறார்கள். அடிக்கடி நண்பர்களும் மாறிக் கொண்டே இருப்பார்கள். இவர்கள் வியாழக்கிழமை தோறும் சித்தர்களின் ஜீவசமாதிக்குச் சென்று வழிபட்டு வந்தால் நன்மைகள் கிடைக்கப்பெறலாம்.

இவர்கள் பெரும்பாலும் சிறுகச் சிறுக முன்னேறி பெரும் வளர்ச்சியைக் காண்பவர்களாக இருப்பார்கள். இவர்களுக்கு தொழில் எண்களான 1 மற்றும் 2இன் ஆதிக்கத்தை விட தொழில் நட்பு எண் 6இன் ஆதிக்கம் சரியான நேரத்தில் செயல்பட்டு வெற்றியைத் தந்துவிடும். பிறந்த திகதிக்கு பகை எண்ணாக இருந்தும் 6ஆம் எண்ணின் ஆதிக்கம் இவர்களுக்கு நன்மையை மட்டுமே செய்வதால், பொருளாதார நிலையில் தன்னிறைவு பெற்று விடுவார்கள். 6ஆம் எண்ணின் ஆதிக்கம் குறைவாக இருப்பவர்களுக்கு தான் பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கும் நிலை உண்டாகும். இவர்கள் பெரும்பாலும் கொடுக்கல்-வாங்கல், பேப்பர் சம்பந்தப்பட்ட தொழில், அழகு சாதனப் பொருட்கள் தொடர்பான தொழில் புரிபவராகவே இருப்பதைக் காணலாம். எப்படியும் இவர்கள் வாழ்க்கையில் 21 வயதிலிருந்து முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்வார்கள். சிலர் 30 வயதில் மேன்மை அடைவார்கள். சுயநலம் மிக அதிகமாக இருக்கும். இவர்கள் பெண்களால்தான் வாழ்வைப் பறிகொடுக்கும் நிலை ஏற்படும். யாருக்கும் தெரியாமல் மந்திர-தந்திர செயல்களில் ஈடுபடும் குணம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் திங்கட்கிழமைதோறும் சூரியனையும் சந்திரனையும் வழிபாடு செய்து வந்தால் நன்மைகள் பெறலாம்.

இவர்கள் பெரும்பாலும் வாயால் கெட்டவர்களாகவே இருப்பார்கள். யோக நிலையும் முயற்சியும் முன்னேற்றமும் பாதிப்படைவதற்கு இவர்களே காரணமாக இருப்பார்கள். பேச்சைக் குறைத்து செயலைத் தெளிவுபடுத்தினால் தொழிலதிபர்களாகும் நிலை உண்டாகும். இவர்களுக்கு தொழில் எண்களின் ஆதிக்கமும் உதவி எண்ணின் ஆதிக்கமும் ஒரே நேரத்தில் செயல்படுவதால். ஆதிக்க பலம் குறைந்து பின்னடைவு ஏற்படுகிறது. அதாவது தொழில் எண்கள் 1 மற்றும் 2இன் ஆதிக்கமும் உதவி எண் 6இன் ஆதிக்கமும் ஒரே சமயத்தில் வெளிப்பட்டு விரயத்திற்குள் தள்ளி விடும். 6ஆம் எண்ணின் ஆதிக்கத்தை மட்டும் பெறும் நிலையை ஏற்படுத்திக் கொண்டால் வாழ்வு வளமாகும் நன்மைகள் தானே கிடைக்கும். இவர்கள் ஞாயிற்றுக் கிழமை தோறும் விநாயகரை வழிபாடு செய்து வந்தால் தடையின்றிநன்மைகள் கிடைக்கப் பெறலாம்.

பெரும்பாலும் இவர்கள் பாக்கிய சாலிகளாகவே இருப்பார்கள். வெற்றி இவர்களைத் தேடிவரும். புகழ், பொருளாதார நிலை உன்னதமாக இருக்கும். இவர்களின் தொழில் எண்களான 1, 2 தொழில் உதவி எண் 6 ஆகியவற்றின் ஆதிக்கம் ஒன்றன்பின் ஒன்றாகச் செயல்பட்டு, தொடர்ந்து முன்னேற்ற நிலையைத் தக்க வைத்துக்கொள்ள வழி செய்து விடும். இருப்பினும் சபலத்தாலும் சஞ்சலத்தாலும் மனம்போன போக்கில் போகும் நிலையும் காணப்படும். பெண் கலைஞர்கள் ஆண்களாலும், ஆண் கலைஞர்கள் தங்களைவிட தகுதி குறைந்த பெண்களாலும் சங்கடப்படும் நிலை உருவாகும் மனதைக் கட்டுப்படுத்தும் கலையைக் கற்றவராக இருந்தால், அனைத்திலும் வெற்றி பெற்று கடைசி வரை சுக வாழ்வு வாழ தொழில் எண்களும் உதவி எண்களும் துணை புரியும். ஏதேனும் ஒரு எண்ணின் ஆதிக்கம் குறைவாக இருந்தால் சிரமப்பட்டு முன்னேறும் நிலை உண்டாகும். இவர்கள் ஞாயிற்றுக் கிழமைதோறும் கலைவாணி மற்றும் நடராஜரை வழிபட்டால் நன்மைகளும் பேரும் புகழும் கிடைக்கப் பெறுவார்கள்.

பிறந்த திகதி 21, விதி எண் 1-ஆக இருப்பவர்களுக்கு 4 ஆண்டுகள் அல்லது 6 ஆண்டுகள் நற்பலனும்,1 அல்லது 3 ஆண்டுகள் சுமாரான பலனுமாக 27 ஆண்டுகள் நற்பலன்கள் உண்டாகும். பிறந்த திகதி 21, விதி எண் 2-ஆக இருப்பவர்கள் தொடர்ந்து 12 ஆண்டுகள் மிக அதிகமான நற்பலனும் 6 ஆண்டுகள் மிதமான பலனும் மாறி மாறிக் கிடைக்கப் பெறுவர். பிறந்த திகதி 21, விதி எண் 3ஆக இருப்பவர்கள் 30 ஆண்டுகள் நற்பலன் கிடைக்கப் பெறுவர். பிறந்த திகதி 21, விதி எண் 4ஆக இருப்பவர்கள் 24 ஆண்டுகள் நற்பலன் கிடைக்கப் பெறுவர். பிறந்த திகதி 21, விதி எண் 5ஆக உள்ளவர்கள் தொடர்ந்து 14 ஆண்டுகளும் பின் 3 ஆண்டுகள் இடைவெளி விட்டு 5 அல்லது 7ஆண்டுகளும் நற்பலனைப் பெறுவர். பிறந்த திகதி 21, விதி எண் 6ஆக இருப்பவர்களுக்கு இடையூறு இல்லாத மேன்மையைச் செய்து கொண்டே இருக்கும். பிறந்த திகதி 21, விதி எண் 7ஆக இருப்பவர்களுக்கு 22 ஆண்டுகள் நற்பலனைத் தரும். பிறந்த திகதி 21, விதி எண் 8-ஆக உள்ளவர்களுக்கு 19 முதல் 24 ஆண்டுகள் வரை நற்பலனைத் தரும். பிறந்த திகதி 21, விதி எண் 9ஆக உள்ளவர்களுக்கு 27 ஆண்டுகள் நற்பலனைத் தரும்.

**எஸ்.என்.ஹிரிஜி**

குறிப்பு :- பிறந்த திகதி எண், விதி எண், தொழில் எண், நன்மை செய்யும் எண் ஆகியவற்றின் ஆதிக்கத்தைப் பொறுத்து தொழில் நிலைகள் மாறுபடும். (தொடரும்)

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டங்களில் மாற்றம் அவசியம்

### பவ்ரல் அமைப்பு வலியுறுத்து

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கத்தினால் உத்தேசிக்கப்பட்டுள்ள தேர்தல் திருத்தச் சட்டங்களில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென அவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

குறிப்பாக விருப்பத் தெரிவு மற்றும் தொகுதிவாரி முறை, ஆசன ஒதுக்கீடு தொடர்பில் புதிய பரிந்துரைகளை பவ்ரல் அமைப்பு முன்வைத்துள்ளது.

விருப்பத் தெரிவு முறையின் மூலம் 40 வீதமானவர்களும் தொகுதிவாரி முறையின் ஊடாக 60 வீதமானவர்களும் தெரிவு செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் வேட்பாளர்கள் பிரசாரப் பணிக் காக ஒதுக்கீடு செய்யப்படும் பணத்தையும் வரையறுக்க வேண்டுமென கோரியுள்ளது. (ஸ்ரீ-2)

## மட்டக்களப்பில் தொடரும் சிங்களக் குடியேற்றம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட சிங்களக் குடும்பங்களை மீள் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 1990ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளினால் கல்குடா, கல்மடு பிரதேசத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட சிங்களக் குடும்பங்களை விரைவில் மீள் குடியேறுவது குறித்து அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

73 சிங்களக் குடும்பங்கள் இவ்வாறு பிரதேசத்தை விட்டு வெளியேறியதாக வும் இவர்களை மீள்குடியேற்றுவது தொடர்பில் வாழைச்சேனைப் பிரதேசசபை யில் ஆராயப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காணி ஆணையாளர் ஜி.டி தர்மதாஸ தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் வாழைச் சேனை ஸ்ரீஜெயந்தி விகாரையின் விகாராதிபதி நாவானே அபயலங்காரதேரர், வாழைச்சேனை பிரதேச செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

மீள் குடியேறும் மக்களுக்குத் தேவையான சகல அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்கப்படும் என பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## பேக்கரி உற்பத்திகளில் அரிசி மாவை கலப்பதற்கு இணக்கம்

பேக்கரி நடத்துநர்கள் தமது உற்பத்திகளில் கோதுமை மாவுடன் அரிசி மாவையும் கலப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

தரமான அரிசிமா தட்டுப்பாடின்றி சந்தையில் கிடைக்குமானால் அவற்றை பேக்கரி உற்பத்திகளுக்குப் பயன்படுத்த முடியும் என அவர்கள் கூறியுள்ளனர்.

இது தொடர்பாக தேசிய சுதந்திர முன்னணியுடனும் அரிசி ஆலையினருடனும் பேக்கரி நடத்துநர்கள் சங்கம் கலந்துரையாடல் களை நடத்தியுள்ளதாக அகில இலங்கை பேக்கரி நடத்துநர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

தரமான அரிசிமா கிடைக்குமானால் நாம் அதை பாண் மற்றும் ஏனைய தயாரிப்புக்களுக்கு கோதுமை மாவுடன் கலக்க முடியும். அத்துடன் 25 சதவீத அரிசிமாவை நாம் கலக்கலாம். ஆனால் அதன் தரம் சிறப்பானதாக இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை அரிசிமா உற்பத்தியில் முதலீடு செய்பவர்களுக்கு வரிச்சலுகை வழங்க அரசாங்கம் இணங்கியுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணி முக்கியஸ்தரான பியசிறி விஜேநாயக்க தெரிவித்துள்ளார். ஏற்கனவே ஒரு முதலீட்டாளர் வெயாங்கொடையில் ஆலையொன்றை அமைப்பதற்கு இயந்திரங்களை இறக்குமதி செய்துள்ளதாக அவர் கூறினார்.

தற்போது பேக்கரி நடத்துநர்களும் அரிசிமா நுகர்வை ஊக்குவிக்க முன்வந்துள்ளனர். அவர்களுக்கு இதற்காக கடன் வழங்க அரசாங்கம் தயாராக இருக்கிறது என அவர் தெரிவித்தார்.

உலகில் சில பல்தேசிய கம்பனிகளால் கோதுமை மா பயங்கரவாதம் இயக்கப்படுவதாகவும் எம்மைப் போன்ற நாடுகளில் உணவுப் பாதுகாப்பு ஏற்படும் போதெல்லாம் அவர்கள் சந்தைகளை இழக்கின்றார்கள். அவர்கள் ஐரோப்பா, அமெரிக்காவிலுள்ள விவசாயிகளை பலப்படுத்த விரும்புகிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## கேக் ஐசிங் டிப்ளோமா பயிற்சி

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு இல.75, அம்மன் கோவில் வீதியில் அமைந்துள்ள யோகி அக்கடமியில் போதனா ஆசிரியர்களுக்கான கேக் ஐசிங் டிப்ளோமா பயிற்சி நெறி வழங்கப்படவுள்ளது.

இவ் ஐசிங் டிப்ளோமா பயிற்சி கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர் என்.எ.ஜெயராஜன் தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2-6)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வுகள் விரைவில் புத்தளத்தில்!

கற்றறிந்த பாடங்களும் தேசிய நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் விசாரணை அமர்வுகள் விரைவில் புத்தளம் மாவட்டத்தில் நடத்தப்படவுள்ளதாக ஆணைக் குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முக்கியமாக புத்தளம் மாவட்டத்தில் தங்கியுள்ள யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள முஸ்லிம் மக்களின் சாட்சியங்களை பதிவு செய்யும் நோக்கிலேயே இவ்வாறு அமர்வுகள் புத்தளம் மாவட்டத்தில் இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வில் கலந்து கொண்டு சாட்சியமளித்த சில முக்கியஸ்தர்கள் புத்தளம் மாவட்டத்தில் இதன் அமர்வுகளைநடத்த வேண்டும்என்று கோரிக்கை விடுத்ததையடுத்து புத்தளத்தில் ஆணைக் குழுவின் அமர்வுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாக தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை ஆணைக்குழுவின் அமர்வுகள் எதிர்காலத்தில் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் நடத்தப்படும் என்று அண்மையில் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்திருந்தார்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் விசாரணை அமர்வுகள் நடைபெற்று முடிந்துள்ளன. அத்துடன் கைது செய்யப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து முகாம்களுக்கும் ஆணைக்குழு விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் நடைபெற்று வரும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகளில் பலதரப்பட்ட முக்கியஸ்தர்கள் சாட்சியமளித்து வருகின்றனர். மேலும் ஆணைக்குழுவின் விசாரணை அமர்வுகளின் காலஎல்லை மேலும் ஆறு மாதங்களினால் நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கு சலுகையுடன் கூடிய சம்பள உயர்வு

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தனியார் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி உள்ளிட்ட சலுகைகளுடன் சம்பள உயர்விற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற் கொண்டுள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி முதல் புளோர் கெயார் என்ற தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான யாழ்.மருத்துவமனையின் சுத்திகரிப்புப் பணியாளர்கள் சம்பள உயர்வு கோரி பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

அங்குசென்ற அமைச்சர் அவர்களுடன் கலந்துரையாடி சம்பள உயர்வு வழங்க நடவடிக்கையெடுக்கப்படுமென்றும் பணிப் புறக்கணிப்பை நிறுத்தி கடமைகளுக்குத் திரும்புமாறும் கேட்டுக்கொண்டதற்கிணங்க பணிப்புறக்கணிப்பு உடனடியாகவே நிறுத்தப் பட்டது.

இந்த நிலையில் அமைச்சர் வழங்கிய உறுதிமொழியின் பிரகாரம் நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்ட அவர் சுத்திகரிப்பு பணியாளர்களுடன் கலந்துரையாடினார்.

அதன் பிரகாரம் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் நிர்ணயிக்கப்பட்ட நாளாந்த சம்பளமாக 425 ரூபா வழங்கப்படுமெனவும் அத்துடன் ஊழியர் சேமலாப நிதி உள்ளிட்ட சலுகைகள் வழங்கப்படுமென்றும் தெரிவித்த அமைச்சர் மருத்துவமனையின் சுத்தம், சுகாதாரத்தைக் கருத்திற் கொண்டு அனைவரும் கடமையுணர்வுடன் பணியாற்ற வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். (ஸ்ரீ-2)

# இயற்பியலுக்கான நோபல் பரிசு-2010

## தேன் ஆடையும் கிராபீனும்



ஆந்தரே கெய்ம்

இயற்பியல் சம்பந்தப்பட்ட கண்டுபிடிப்புக்காக 2010ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு பிரிட்டிஸ் விஞ்ஞானிகள் ஆந்தரே கெய்ம், கொன்சிட்டான்டின் நோவோசியெலோவ் ஆகிய இரண்டு பேருக்கு வழங்கப் படுகிறது. இந்த இருவரும் ரஷ்யாவில் பிறந்து தற்போது பிரிட்டனில் உள்ள மான்சிஸ்டர் பல்கலைக்கழகத்தில்பேராசிரியர்களாக பணியாற்றுகின்றனர்.

ஒற்றையணு தடிப்புள்ள கரிம அணுப்படலத்தை பற்றிய இருவருடைய ஆய்வுக்காக நோபல் பரிசு வழங்கப்படுகிறது. பல அதிசயத்தக்க பண்புகளை உள்ளடக்கியது இவர்கள் உருவாக்கியுள்ள கிராஃபீன். இது எதிர்காலத்தில் பல்வேறு சாதனைகளுக்கு அடித்தளம் இடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்கள் தட்டையான வடிவில் கிராஃபினை உருவாக்கி இருக்கிறார்கள். தாமிரத்திற்கு நிகராக மின் கடத்தும் திறன் உடையது. மேலும் வெப்பத்தையும் எளிதில் கடத்தும் தன்மை உடையது. குவாண்டம் இயற்பியல் துறை சார்ந்தது இந்தக்கண்டுபிடிப்பு. ஹீலியம் வாயுக்கூட ஊடுருவ முடியாத வகையில் மிகவும் அடர்த்தி மிக்கது.

சாதாரண பென்சில்களில் உள்ள கிராஹைற காபனில் இருந்து கிராஃபீனை தமது அயராத கடும் உழைப்பு, அர்ப்பணிப்பு மூலமாக இருவரும் உருவாக்கியுள்ளனர். மின் அணுவியல் துறையில் இந்த கண்டுபிடிப்பு பல புதுமைகளுக்கு வழி செய்யும் என்று எதிர்பார்க்கலாம்.

சோலர் (சூரியன்) பற்றறிகள் உருவாக்கவும் இது பயன்பட வாய்ப்புள்ளது.

மேலும் பிளாஸ்டிக்குடன் இதைச் சேர்த்து புதுவகை மின் கடத்தியாக பயன்படுத்தலாம். மெல்லியதாகவும், மீட்சித் தன்மை உடையதாகவும் இலேசான எடைகொண்டதாகவும் இருப்பதால் எதிர்காலத்தில் செயற்கைக்கோள்கள், விமானங்கள், கார்கள் தயாரிப்பில் கிராஃபீன் க்லப்புப்பொருட்கள் பயன்படுத்தப்படும்.

காபன் பல்வேறு தன்மைகளில் நுழையும் தன்மை உடையது. கார்பனில் பொதுவகை கிராபைட், இது கார்பனின் அறுகோண வடிவமைப்பை (Hexagonal Structure)கொண்டது. இதன் உயர் அழுத்தத்தின் கீழ் வைரம் உருவாகிறது. புதிய மலிக் குலர் முறையானது புல்லர்னஸ் (Fullernes)என்று அழைக்கப்படுகிறது. இதில் முக்கியமானவை சி60, என்று அழைக்கப்படும். இது 60 ஆவது காபன் அணுக்களைக் கொண்டுள்ளது. இது பார்ப்பதற்கு கால்பந்துபோல் காணப்படுகிறது. இது இருபது ஹெக்சகனல் மற்றும் 12 பென்டகனைக்கொண்டு வட்டம்போல் உருவாக்குகிறது. இந்த புல்லர்னஸ் கண்டுபிடிப்பு 1996இல் வேதியரில் நோபல் பரிசை வென்றது.


குவாசி-ஒன்-வட்டவடிவ காபன் முறை, காபன் நனோ குழாய்கள் பல நூற்றாண்டுகளாக பயன் படுத்தப்பட்டு வந்தன. ஆனால் ஒற்றை நனோ குழாய்கள் 1993ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டுக்கு வந்தன. இந்த ஒற்றை நனோக் குழாய்கள் கிராஃபீனோடு பல வகைகளில் ஒத்துப்போகின்றன. இதில் தெரிவது என்னவெனில் கிராபைட் எக்லோசலை காபன் சீட்களை ஒன்றன் மேல் ஒன்றாக கொண்டுள்ளது.

இதன் மூலம் நாம் புரிந்து கொள்வது என்னவென்றால், இந்த ஒற்றை சீட் முறையை அதேமுறையில் தயாரிக்க முடியாது. ஆனால் 2004இல் இரண்டு விஞ்ஞானிகள் இந்த முறையை கிராஃபீட் மூலம் பயன்படுத்த முடியும் என்பதை நிரூபித்துக் காட்டினார்கள். கிராஃபீன் போன்ற வேரிப்பொருட்கள் 19960களிலேயே அறியப்பட்டாலும் அதனோடு ஒற்றை லேயர்களை இணைப்பது மிகவும் கடினமாக இருந்தது. ஆனால் கிராஃபீனோடு இணைந்து அதன் மூலம் 2 டி செயற்பாடுகளை கண்காணிப்பதில் ஆண்ட்ரீ கெய்ம், கொன்சிட்டான்டின் நோவோ சியெலோவ் ஆகிய இந்த இரண்டு விஞ்ஞானிகளும் அவர்களுடைய குழுவும் வெற்றி பெற்றனர்.

**கிராஃபீன் என்றால் என்ன?**

கிராஃபீனின் எலக்ரோனிக் உபகரணம் ஒரு ஒற்றை லேயர் காபன் அடைக்கப்பட்ட அறு கோணம் (தேனாடை) எனப்படும். இது மூன்று வட்ட சதுர பொருட்களில் இருந்து மாறுபட்டது. கிராஃபீன் மின் தொடர்பு மிகவும் குறைவானதாகும்.

ஆனால் இந்தப் பொருளின் அடர்த்தி பூச்சியம். ஆனால் இதனுடைய பெர்மி அளவு (Fermi Level) மின்கடத்தியால் மாற்ற இயலும். இதன் மூலம் இந்த மின்பொருள்கள் n-Doped அல்லது p-Doped சார்ந்திருக்கும். கிராஃபீனையும்



தேன் ஆடை வடிவில் காபன் அணுக்கள்

இதனுடன் செலுத்த இயலும். (எ.கா.)தண்ணீர் அல்லது அமோனியா அதன் மேல் பகுதியில் வைக்கப்பட்டிருக்கும். டோப்ட் (Doped) கிராஃபீன் மின் ஆற்றல் மிகவும் சக்தி வாய்ந்தது.

இதன் உருவாக்கம் 2004ஆம் ஆண்டுக்கு முன்னர் கிராஃபீனின் ஸ்டோல் சீட்ஸ் பற்றி யாரும் யோசிக்கவில்லை. இதனால் தான் ஆந்தரேகெய்ம், கொன்சிட்டான்ஸ்டின் இருவரும் இந்த முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்றதும் அவர்களுக்கு இந்த பரிசு வழங்கப்பட்டது. அவர்கள் இருவரும் அறிவியலில் தங்களது விளக்கத்தை 2004ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வெளியிட்டனர். அவர்கள் சாதாரண, ஆனால் சக்தி வாய்ந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கிராபைட்டை, கிராபைட் கிரிஸ்டல்டோப்புடன் இணைத்து பின்னர் அதை சிலிக்கனுக்கு மாற்றினர்.

இந்த முறை முதலில் ஆர்.ரெப்ஸ் குழுவினரால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள். ஆனால் அவர்களால் அதன் மோனோலேயர்சை அடையாளம் காணமுடியவில்லை. மான் செஸ்டரை



கொன்சிட்டான்டின்

சேர்ந்த விஞ்ஞானிகள் குழு ஒற்றை லேயரால் செய்யப் பட்ட பிளேக்சை அடையாளம் காணமுடிந்தது. (எ.கா) கிராஃபீன் பின்னர் அவர்கள் கிராஃபீனை ஹால்பாருடன் சேர்த்து அதற்கு மின்சார இணைப்பை தந்தனர். இந்த வகையில் அவர்கள் longitudinal ரெசிடென்ஸ் மற்றும் ஹால் ரெசிடென்சை மதிப்பிட முடிந்தது. கிராஃபீனுடன் புதிய தொழில்நுட்பத்தை இணைக்கும் முறைகள் கண்டுபிடிக்கப்பட்டவுடன் மான் செஸ்டர் குழுவும் வேறு குழுக்களும் ஏராளமான புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கினர்.

இதன் ஒரு பகுதியாக ஓர் அணு தடிமன் கொண்ட, மிக மெலிந்த, கரிமப் படத்தாள்கள் உருவாக்கப் பட்டன. இதற்கிடையே டபிள்யூ. ஏ.பீ.ஹீர் ஜார்ஜியா டெக்னாலஜியை சேர்ந்த விஞ்ஞானியான இவர் சிலிக்கன் காபனேட்டிலிருந்து (Sic) சிலிக்கனை எரிய வைக்க ஆய்வு மேற்கொண்டார். கொலம்பியா பல்கலைக்கழகத்தை சேர்ந்த பி.சிம் தலைமையிலான குழு மெல்லிய கரிமப் படலத்தை உருவாக்கியது குறித்து ஆய்வு மேற்கொண்டது. அவர்கள் கிராபிட் கிரிஸ்டலை ஏவுகணையில் முனையில் வைத்து சோதனை மேற்கொண்டனர். இந்த முறையில் அவர்களால் 10 கிராஃபீன் லேயர்களை உருவாக்க முடிந்தது.

இதன் மூலம் இது பெரிய அளவிலான கரிமப் படத்தாள்களை கிராஃபீனிலும் செய்யலாம். தொழிற்சாலைகளில் 70 செ.மீ நீளமுள்ள பெரிய சீட்டுக்கள் உருவாக்கப்படுகின்றன. கிராஃபீன் ஒரு கடத்தி மாற்றியாக இருந்தாலும் இதன் மூலம் தொடுதிரை, டார்ச் விளக்குகள், சோலர் செல்களை உருவாக்கலாம். செயற்கைக் கோள்களிலும், விமானங்களிலும் இதனைப் பயன்படுத்தலாம். குவாண்டம் இயற்பியல் துறை சார்ந்த இந்த அரிய கண்டுபிடிப்பு பல துறைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

# பொன்சேகாவுக்கு இயற்கை மரணத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி!

## ஜயலத் எம்.பி.குற்றச்சாட்டு



(கொழும்பு) சிறைப்படுத்தப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவுக்குத் தேவையான வைத்திய உதவிகள் மறுக்கப்பட்டிருப்பதன் மூலம், அவருக்கு இயற்கை மரணத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குற்றம் சாட்டியுள்ள ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியான டாக்டர் ஜயலத் ஜெய்வர்த்தன தெரிவித்துள்ளார்.

பொன்சேகாவின் உயிரைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை பொறுப்புள்ளவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற முன்னாள் இராணுவத்தளபதியை நேற்று முன்தினம் சந்தித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஜயலத் எம்.பி இங்கு மேலும் கூறுகையில், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை சிறைச்சாலையில் பார்த்த போது, அவர் சுவாசிப்பதற்கு கஷ்டப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

கடந்த 10 மாதங்களாக தனக்கு உடற் பயிற்சி செய்வதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்றும் உடற்பயிற்சி செய்வதற்கான இயந்திரத்தைப் பெற்றுக் கொடுக்குமாறு நீதிமன்றம் அறிவித்திருக்கின்றபோதிலும், அவை வழங்கப்படவில்லை என சரத் பொன்சேகா கூறியதாக தெரிவித்தார்.

அவருக்கு உடற்பயிற்சி இயந்திரம் பெற்றுக்கொடுக்கும் விடயம் தொடர்பில் நாம் பாராளுமன்றத்தின் கவனத்திற்கும் கொண்டு வந்தோம்.

ஆனாலும், இதுவரையில் அவருக்கு அந்த வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. சிறைச்சாலைகள் ஆணையாளரது கவனத்திற்கும் இந்த விடயம் கொண்டு வரப்பட்டது. ஆனாலும் பயன் கிடைக்கவில்லை. அவருக்கு ஏற்பட்டுள்ள நுரையீரல் சம்பந் தமான நோய் தொடர்பில் விசேட வைத்திய நிபுணரை நியமிக்குமாறும் நாம் வலியுறுத் தியிருந்தோம்.

இவை தவிர்க்கப்பட்டதன் பயங்கரமான விளைவுதான் தற்போது அவர் வைத்திய சாலைக்கு வர வேண்டியதாகியுள்ளது.

அத்துடன், அவருக்கு நிமோனியா காய்ச்சலும் ஏற்படுவதற்கு சந்தர்ப்பங்கள் அதிகமாக இருக்கின்றன.

மேலும் அவரது சுற்றப்புறச் சூழலில் அவருக்கு மிகப் பயங்கரமான நோய்களை ஏற்படுத்தக்கூடியதாகவும் அமையலாம்.

இதன்மூலம், அவர் இயற்கை மரணத்தை எய்திவிட்டார் என்பதை நிரூபிப்பதற்கான நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது. இது பயங்கரமானது.

இன்று அவர்து உயிர் பயங்கரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இவருக்கு சிகிச்சையளிப்பதற்கென விசேட வைத்திய நிபுணர் ஒருவரை நியமிக்க முடியாமைக்கான காரணம் என்ன? ஏன் அதற்கான உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று கேட்க விரும்புகிறோம்.

அதுமட்டுமல்லாது, மேற்கூறப்பட்டுள்ள வசதிகளை உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்குமாறு பொறுப்பானவர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

சிறைச்சாலை அதிகாரிகள் மட்டுமன்றி, அரசாங்கம் சரத்பொன்சேகா விடயத்தில் தலையிட்டு அவருக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக்கொடுத்து, அவரது உயிருக்கு ஆபத்துக்கள் ஏற்படாத வண்ணம் நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என அவர் கூறினார். (ஸ்ரீ-2)

## லண்டனில் தீ விபத்து இலங்கை இளைஞர் பலி

லண்டனில் உள்ள மாடிக் கட்டடமொன்றில் ஏற்பட்ட தீ விபத்தால் இலங்கை இளைஞர் ஒருவர் கடந்த 14ஆம்திகதி உயிரிழந்துள்ளார்.


சாய்தமருதுவைச் சேர்ந்த 30 வயதுடைய அப்துல் அஸீஸ் பௌசுல் இஹ்ஸான் என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞர் தங்கியிருந்த மாடிக் கட்டடத்தில் ஏற்பட்ட மின்னொழுக்கின் காரணமாக இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஸ்ரீ-2)

## இராணுவச் சட்டத்தின் பிரகாரமே இராணுவ நீதிமன்றம் நடவடிக்கை மேற்கொள்கிறது

### கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு) இராணுவச் சட்டத்தின் அடிப்படையில் இராணுவ நீதிமன்றம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில், இலங்கையின் இராணுவச் சட்டங்கள் பிரித்தானிய இராணுவச் சட்டங்களை தழுவி உருவாக்கப்பட்டவை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சரத்பொன்சேகாவிற்கு இராணுவ நீதிமன்றம் விதித்த தண்டனைகளை விமர்சிக்கும் நபர்கள் இராணுவச் சட்டமும் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது என்பதனை மறந்து பேசுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசியல் காரணிகளுக்காக இராணுவச் சட்டங்களை உதாசீனம் செய்யமுடியாதெனவும் சுயலாப நோக்கங்களுக்காக இராணுவ சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவர முடியாதென்றும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)


## அபிவிருத்திக் காலத்திற்கான ஜனாதிபதியும் ஐரோப்பாவில் புலம்பெயர்ந்து வாழும் மக்களும்



எமது இலங்கைத் திருநாட்டின் மாண்புமிகு ஜனாதிபதி கௌரவ மகிந்த ராஜபக்ஷ அவர்களது இரண்டாவது கட்ட பதவியேற்பு வைபவம் இன்று வெகு விமரிசையாக நடைபெறுகின்ற இந்த வேளையிலே Eu Lanka Forum நிறுவனத்தின் தலைவர், ஜேர்மனிய சட்ட ஆலோசகர் மாண்புமிகு ஜனாதிபதியின் புலம்பெயர்ந்த மக்களுக்கான இணைப்பாளரும் கௌரவ ஆலோசகருமான திரு.M.T.S. இராமச்சந்திரன் அவர்கள் மற்றும் Eu Lanka Forum நிறுவனத்தினர் புலம்பெயர்ந்த மக்களுடன் இணைந்து எமது மாண்புமிகு ஜனாதிபதி அவர்களை வாழ்த்துவதையிட்டு பேருவகை அடைகின்றோம்.

கடந்த முப்பது தசாப்தங்களுக்கும் அதிகமாக இம் மண்ணிலே இடம்பெற்ற கொடிய யுத்த காலத்தில் பதவியேற்ற மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் இன்று சமாதான இலங்கையின் கௌரவ ஜனாதிபதியாக இரண்டாவது தடவை பதவியேற்கும் வைபவமானது மிகவும் சிறப்புக்குரியது .இனிவரும் காலகட்டங்களில் மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் பல்வேறுபட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளினூடாக எமது தாய் நாட்டினை வெற்றிப் பாதையில் வழி நடத்துவார் என்றும் ஐக்கிய இலங்கையிலே தொடர்ந்தும் ஜனாதிபதியாக பதவியேற்பார் என்ற நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் வாழ்க பல்லாண்டு என வாழ்த்துகிறோம்.

திரு M.T.S. இராமச்சந்திரன்.
தலைவர்,
Eu Lanka Forum



திரு.M.T.S.இராமச்சந்திரன்
ஜேர்மனிய சட்ட ஆலோசகர்
(Muthmann & Gorenflo)
தலைவர் **Eu Lanka Forum,**
மாண்புமிகு ஜனாதிபதியின் புலம்பெயர்ந்த
மக்களுக்கான இணைப்பாளரும்
கௌரவ ஆலோசகரும்

வானமும் நன்றே, பூமியும் நன்றே. ஆனால் அவற்றின் இடையேயுள்ள அந்த ஒன்றுதான் கெட்டது.
~ ஸ்வயின் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தமிழ் மக்களின் மனங்களை ஜனாதிபதி மகிந்த வெல்லவேண்டும்!

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று இரண்டாவது தடவையாக ஜனாதிபதிப் பதவியை பொறுப்பேற்கின்றார். முதற் தடவையில் அவர் ஜனாதிபதியாக பதவியேற்றபோது இந்த நாட்டில் யுத்தம் நடந்துகொண்டிருந்தது.

அதேசமயம் நோர்வேயின் அனுசரணையுடன் அரசு– விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளும் அதற்கான முயற்சிகளும் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற மகிந்த ராஜபக்ஷ மிகப் பெரியதொரு யுத்தத்தை முன்னெடுத்தார். அந்த யுத்தத்திற்கு இந்தியா, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளின் தாராளமான உதவிகளும் கிடைக்கப் பெற்றன.

இப்போது யுத்தம் முடிந்துவிட்டது. இரண்டாவது தடவையாக மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்கும் போது யுத்தமில்லை. ஆனால் அந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

வன்னி யுத்தத்தில் ஏற்பட்ட அவலம், முட்கம்பி முகாமில் அனுபவித்த வேதனை, உறவுகளையிழந்த சோகம் இன்னமும் தொடரும், காணாமல் போனவர்களுக்கான காத்திருப்பு, கணவனையிழந்த இளம் குடும்பங்களின் பரிதவிப்பு இவையாவற்றிக்கும் மேலாக,

எத்தனையோ பெறுமதிகளை முப்பது வருடகால யுத்தத்திற்கு தாரைவார்த்துவிட்டு எதுவும் இல்லை என்ற வெறுமையில் வெந்து வெதும்பும் சிறுபான்மைத் தமிழினம். இவ்வாறானதோர் சூழ்நிலையிலேயே மகிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவையாக, ஜனாதிபதியாக பதவியேற்கிறார்.

முதற்தடவையில் ஜனாதிபதியாகப் பதவியேற்று யுத்தத்தை நடத்தி அதில் வெற்றியடைந்ததன் மூலம் சிங்கள மக்களின் மனங்களை அவர் வென்றார் என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

அதேசமயம் தமிழ் மக்களின் மனங்களை அவர் வெல்லவில்லை என்பது நிறுத்திட்டமான உண்மை.

ஆக, சிங்கள மக்களின் மனங்களை மட்டும் வெல்வதென்பது பூரணமானதல்ல. எனவே இன்று இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாக பதவியேற்கும் மகிந்த ராஜபக்ஷ இப் பதவியேற்பில் தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்கான உறுதிப்பாட்டையும் எடுக்கவேண்டும்.

கடந்த பதவிக் காலத்தை யுத்தத்திற்காக செலவிட்ட ஜனாதிபதி இரண்டாவது பதவிக்காலத்தை சமாதானத்திற்காக செலவிடுவது காலத்தின் கட்டாய தேவையாகும்.

பெரும்பான்மையினம் வாழ்வதும் சிறுபான்மையினம் தாழ்வதுமான சூழமைவில் இருந்து கொண்டு நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுப்பதென்பது ஒருபோதும் முடியாத காரியம்.

எனவே தமிழ் மக்கள் இந்த மண்ணில் சம உரிமை பெற்று வாழ்வதற்கான தீர்வை ஜனாதிபதி அமுல்படுத்தவேண்டும்.

பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேதம் கடந்து சமத்துவம், சமஉரிமை, இறையாண்மை என்ற பெருமைகளை தமிழினம் பெறுவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தர்மயுத்தம் நடத்த வேண்டும். அந்த யுத்தத்தில் அடையும் வெற்றி தமிழ் மக்களின் மனங்களை வெல்லும்.

## பூட்டான் பிரதமர் இலங்கை விஜயம்

பூட்டானியப் பிரதமர் லியொன் செயாஜிக்மே யொசர் தின்லே நேற்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாக விமான நிலையத்தி லிருந்து கிடைக்கும் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

நேற்று அதிகாலை அவர் இலங்கை வந்தடைந்துள்ளார். பூட்டானியப் பிரதமருடன் அந்நாட்டின் முக்கிய அதிகாரிகள் அடங்கிய 14 பேர்கொண்ட குழுவொன்றும் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் இரண்டாம் தவணைப் பதவிப் பிரமாணத்தில் பங்கெடுக்க வரும் வெளிநாட்டு தலைவர்கள் வரிசையில் பூட்டானியப் பிரதமரும் உள்ளடங்கியுள்ளார். பதவியேற்பு வைபவத்தின் பின் இலங்கை மற்றும் பூட்டான் நல்லுறவுகளை வலுப்படுத்தல், வாணிபத் தொடர்புகளை அதிகரித்தல் தொடர்பாக இரு நாட்டுத்தலைவர்களும் கலந்துரையாடவுள்ளனர். (ஸ்ரீ-2)

## பொன்சேகாவுக்கு உடற்பயிற்சி இயந்திரம் வழங்க உத்தரவு

(கொழும்பு)

வெலிக்கடை சிறையிலுள்ள சரத் பொன்சேகாவுக்கு உடற் பயிற்சி இயந்திரமொன்றைவழங்கு மாறும் அவரின் சிறைக்கூண்டின் கூரையை பழுது பார்க்குமாறும் சிறைச்சாலைதிணைக் களத்திற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தர விட்டது.

சரத்பொன்சேகாவிற்கு எதிரான வெள்ளைக்கொடி வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பொன் சேகா சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதால் விசாரணைக்கு சமுகமளிக்க முடியாதுள்ள தாக அவரின் சட்டத்தரணி நளின் லடுவாஹெட்டி தெரிவித்தார்.

இதனையடுத்து பொன்சேகாவுக்கு உடற்பயிற்சி இயந்திரம் வழங்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளபோதிலும் சிறைச்சாலை அதி காரிகள் அதை இன்னும் வழங்கவில்லை .

மேலும் பொன்சேகா அடைக்கப்பட்டுள்ள கூண்டின் கூரை உடைந்துள்ளதால் மழை நீர் ஒழுகுவதாகவும் சட்டத்தரணி நளின் லடுவாஹெட்டி தெரிவித்தார். பொன்சேகாவுக்கு உடற்பயிற்சி இயந்திரம் வழங்க நலன்விரும்பிகள் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

## புற்று நோயாளர்களுக்கு உடுபுடைவைகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண புற்றுநோய், எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கத்தின் அனுசரணையுடன் 35 வறிய புற்று நோயாளர்களுக்கு கடந்த மாதம் 30ஆம் திகதி சங்கப் பணிமனையில் வைத்து உடுபுடைவை அன்பளிப்புச் செய்யப்பட்டது.

கொழும்பைச் சேர்ந்த நடராசா மகிழ்னன், திருமதி விமலா மகேந்திரன் ஆகியோர் வழங்கிய நன் கொடையின் நிதியைக் கொண்டு இவ் உடுபுடைவைகள் வழங்கப்பட்டதாக சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


## சாவகச்சேரியில் பஸ் மீது கல்வீச்சு

(பருத்தித்துறை)

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் மீது கல்வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 7.10 மணியளவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியை பஸ் அண்மித்தபோது பஸ்ஸின் பின்புற இடதுபக்க கண்ணாடிமீது இனம் தெரி யாதவர்களினால் கல்வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சாவகச்சேரி பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-48,7)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## திருமுடியும் இருமுடியும்

ஏதேனும் ஒரு பொருளை ஒரு துணியில் கட்டி முடிந்தால் அது முடிச்சு எனப்படும். காலப்போக்கில் இது 'முடி' என்று சுருக்கி அழைக்கப்பட்டு வருகிறது. இறை திரவியம் ஏதாவது அதில் இருந்தால் அவை 'திருமுடி' எனப் பெயர் பெறும். ஐயப்பன் அபிஷேகத்திற்கான நெய்யிட்ட தேங்காய், சூடம், பத்தி போன்ற பொருட்கள் அடங்கிய முடிச்சு 'திருமுடி' என அழைக்கப்பட்டது.

இந்தத் திருமுடி என்ற தமிழ்ச்சொல் வழக்கு மலை நாட்டு மக்களிடையே 'இருமுடி' என்று அழைக்கப்பட்டது. இன்று ஐயப்ப பக்தர்கள் எல்லோராலும் 'இருமுடி' என்று அழைக்கப்படுவதோடு இரு பைகள் கொண்டதாகவும் அது பரிணமித்தது. அதில் ஒரு பகுதியில் இறை திரவியத்தையும், மற்றொரு பகுதியில் தங்களுக்கு வேண்டிய உணவுகளையும் கொண்டு செல்கின்றனர்.

இறைவனுக்குக் கொண்டு செல்லப்படும் பூஜைப் பொருட்களை இடுப்பிற்குக் கீழ் இருக்குமாறு கொண்டு செல்லக்கூடாது என்றும், இடுப்பிற்கு மேலே நெஞ்சிற்கு நேரே கொண்டு செல்ல வேண்டும். அப்படி கொண்டு செல்ல முடியவில்லை என்றால் தலைமீது தாங்கிச் செல்ல

# வெள்ளி நற்சிந்தனை

149

## பக்தியின் மொழி தமிழ்

இறைவன் மீது நம்பிக்கை ஏற்படும் நிலையேபக்திநிலையாகும். நாயன் மாரும் அடியாரும் இத்தகைய நிலையில் நின்றமைக்குப் பல பக்திப் பாடல்கள் சான்றாக உள்ளன. அப்பாடல்களை இன்று கருத்தூன்றிப் படிக்கும் போது இதனை நன்குணர முடிகிறது. சிறப்பாகச் சுந்தரர் பாடிய தேவாரங்களில் உலக வாழ்வியலில் பக்தியின் முனைப்பு எவ்வாறமையும் என்பது நன்கு புலப்படுத்தப்பட்டுள்ளது. இம்மையில் பெற்ற வாழ்வியலனுபவம் மறுமை பற்றிய சிந்தனையையும்தூண்டுகிறது. அதனைச் சுந்தரர் பாடலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

'மறுமைக்கு மற்றொரு துணையினிக் காணேன்' என்ற அவருடைய கூற்று இம்மைக்கும் மறுமைக்கும் இறைவனே துணை என்பதை உணர்த்தி நிற்கிறது. தான் மறுமைபற்றி வருந்தியதையும் வெளிப்படையாகக் கூறுகிறார். 'மறவா வரம் பெற்றேன்' என்ற தன்னம்பிக்கையையும் பாடலிலே சுட்டியுள்ளார். முன்னர் இறைவனைத் தான் மறந்திருந்ததை எண்ணிப் பின்னர் இறைவன் நினைப்புடன் வாழும் வாழ்வைப் பற்றிப் பேசுகிறார்.

மனிதன் இறை சிந்தனை யற்று உலகியலில் ஆழ்ந்து விடுவதும் உண்டு. ஆனால் திருக்கோயில் வழி பாடு இறைவன் பற்றிய சிந்தனையைநல்கும்.

மனிதன் தன்னைச் சுற்றியிருக்கும் சுற்றத்தைத் துணையென்று கருதுவதால் பயனில்லை. இது சுந்தரருடைய வாழ்வியலனுபவம் பெற்றதாய், தந்தையரோடு அவர் வாழவில்லை. அரச வாழ்வியலில் வாழ வேண்டியவரானார். இருமனைவியரோடு வாழும் நிலையையும் பெற்றார். அதற்கு இறைவன் துணையையும் நாடிப் பெற்றார். அதனால் இறைவனையே துணையென்று தொழுது வாழ்ந்தார். தான் பெற்ற அனுபவத்தை எல்லோரும் அறியப் பாடலில் எடுத்தியம்பியுள்ளார். முத்தியையும் ஞானத்தையும் வானவர் அறியாத நிலையில் பற்பல நெறிகளூடே தான் அறிந்து கொண்ட பக்தி நிலையைப் பற்றியும் பாடலிற் குறிப்பிட்டுள்ளார். கற்பனை வடிவிலே தான் அறிந்திருந்த கடவுளை தான் அடியவனாகிக் கழுமல வளநகரிலே கண்டு கொண்டதாகக் கூறுகிறார்.

சுந்தர வேடங்கள் பூண்டு உலகியல் வாழ்வின் இன்பங்களையெல்லாம் நுகர்ந்திருந்த சுந்தருக்குத் திருக்கோயில் வழிபாடு ஒரு புதிய சிந்தனையைத் தந்தது. உலகியல்நிலையில் அனுபவிக்க எண்ணியவற்றையெல்லாம் புறந்தள்ளி விட்டுப் புதியதொரு உணர்வுடன் செயற் பட வைத்தது. இந்த அனுபவம் அவரை ஒரு தெளிவான சிந்தனையில் இட்டுச் சென்றது. எல்லோரும் கற்பனை செய்து கூறிய இறைவனின் அருள் நிறைந்த திருக்கோலத்தைக் கோயிலில் கண்ட போது அவர் பெற்ற உணர்வு தெளிவான அறிவைத் தந்தது. 'கற்பனை கற்பித்த கடவுளை அடியேன் கழுமல வளநகர்க் கண்டு கொண்டேன்' என்ற பாடலடி சுந்தரரில் ஏற்பட்ட மாற்றத்தைச் சுட்டி நிற்கிறது. மற்றவரது அனுபவம் காட்டிய கோலத்தைத் தான் நேரிலே கண்ட போது பக்திவயப்பட்டதைச் சுந்தரர் செந்தமிழால் பாடியுள்ளார். அவரது பக்தியுணர்வு எம்முடைய உள்ளத்திலும் ஊற்றெடுக்கும்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

*"மற்றொரு துணையினி மறுமைக்
குங் காணேன்
வருந்தலுற்றேன் மறவாவரம்
பெற்றேன்
சுற்றிய சுற்றமும் துணையென்று
கருதேன்
துணையென்று நான் தொழப்பட்ட
வொன்சுடரை
முத்தியு ஞானமும் வானவரறியா
முறைமுறைபலபலநெறிகளும்
காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளையடி
யேன்
கழுமல வளநகர்க் கண்டு
கொண்டேனே."*

# உலகில் மிகவும் குள்ளமான பெண்ணாக

# ஹடிசி கொசாமன் கின்னஸ் சாதனை



(லண்டன்)

இரண்டே கால் அடி உயரமும் 6.8 கிலோ எடையும்கொண்ட ஹடிசி கொசாமன் என்பவர் உலகின் மிகவும் குள்ளமான பெண்ணாக கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

துருக்கி நாட்டின் கழ்ரிலி பகுதியில் 21 வயதுடைய ஹடிசி கொசாமன் வசிக்கிறார். அண்மையில் கின்னஸ் உலக சாதனைகளை பட்டியலிடும் குழுவினர் ஹடிசியின் உயரம் மற்றும் எடையை பரிசோதனை செய்தனர். பின்னர் இரண்டே கால் அடி (71செ.மீ) உயரம் 6.8 கிலோ எடையுள்ள ஹடிசி உலகின் குள்ளமான பெண் என்று அறிவித்து 2010 ஆம் ஆண்டுக்கான கின்னஸ் சாதனை புத்தகத்தில் அவரின் பெயரை பதிவு செய்துள்ளனர்.

இது குறித்து ஹடிசி கூறுகையில், நான் பள்ளிக்கு செல்லும் போது சக மாணவர்கள் என் உயரம் குறித்து கிண்டல் செய்வார்கள். ஆனால் குள்ளமாக இருப்பதை எண்ணி நான் கவலை பட்டதில்லை. என்றாவது ஒருநாள் இதற்கு ஓர் அங்கீகாரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இருந்தேன். அந்த நம்பிக்கை வீண் போகவில்லை. உலகின் குள்ளமான பெண் என்று கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது மகிழ்ச்சியாக உள்ளது. குள்ளமாக இருந்து சாதனை படைத்து பிரபலமானது மூலம் தற்போது நான் உயர்ந்த இடத்தில் இருப்பதை உணர்கிறேன். மேலும் உலகின் பிரபலமான பல்வேறு மனிதர்கள் குறிப்பாக உலகின் உயர்ந்த மனிதரை சந்திக்க விரும்புகிறேன் என்று ஹடிசி தெரிவித்தார்.

அவரது பெற்றோர் இப்ராகிம் ஹடசன் கூறுகையில், எந்த ஒரு பிரச்சினையும் இல்லாமல் மற்ற குழந்தைகள் பிறக்கும் போது இருப்பது போன்றுதான் ஹடிசியும் இருந்தாள்.

ஆனால் நாளடைவில் அவளின் வளர்ச்சி தடைப்பட்டது. அதற்கு எலும்பில் ஏற்பட்டுள்ள பாதிப்பே காரணம் என்று டாக்டர்கள் கூறிவிட்டனர். இருப்பினும் வீட்டில் தங்களுக்கு சிறு சிறு இயன்ற வேலைகளை அவள் செய்து கொடுப்பாள் என்று அவர்கள் தெரிவித்தனர். (ஸ்ரீ)

# பாகிஸ்தானில் தூக்கு தண்டனை பெற்ற பெண்ணை விடுவிக்க வேண்டும்

## போப் ஆண்டவர் வேண்டுகோள்

(வத்திக்கான்)

பாகிஸ்தானைச் சேர்ந்த கிறிஸ்தவ பெண் ஆசியா பீபி. 5 குழந்தைகளுக்கு தாயான இவர் முஸ்லிம் மதத்தை அவமதித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார். அவருக்கு பாகிஸ்தான் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்புக் கூறியது. இதையடுத்து போப் ஆண்டவர் பெனடிக்ட் பாகிஸ்தான் அரசுக்கு ஒரு வேண்டுகோள்விடுத்துள்ளார். அதில் கூறியிருப்பதாவது,

பாகிஸ்தானில் கிறிஸ்தவர்கள் அடிக்கடி வன்முறைக்கு ஆளாகிறார்கள். 5 குழந்தைகளுக்கு தாயான ஆசியா பீபிக்கு மரண தண்டனை விதித்திருக்கிறார்கள். அவரை விடுதலை செய்ய வேண்டும். ஆசியா பீபிக்காகவும், அவரது குடும்பத்துக்காகவும் நான் வருந்துகிறேன். இதேபோன்ற துன்பங்களில் சிக்கியுள்ள அனைவருக்காகவும் நான் பிரார்த்திக்கின்றேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஸ்ரீ)

# பிரான்ஸ் நாட்டில் எடை குறைப்பு மருந்து உட்கொண்ட 500 பேர் பலி

(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டில் உள்ள மருந்து நிறுவனம் ஒன்று உடல் எடையைக் குறைக்க புதிய மருந்தை வெளியிட்டது. இந்த மருந்தை பல இலட்சம் பேர் வாங்கி சாப்பிட்டு வந்தனர். இவர்களில் சிலர் திடீரென இறந்துவிட்டனர்.

வேறு ஏதோ காரணங்களால் அவர்கள் இறந்திருக்கலாம் எனக் கருதப்பட்டது. ஆனால் எதனால் இறந்தார்கள் என்று சமீபத்தில் நடத்தப்பட்ட மருத்துவ ஆய்வில் எடை குறைப்பு மாத்திரை உட்கொண்டதால் தான் இறப்பு ஏற்பட்டது என்பது தெரிய வந்தது.

இதுவரை 500 க்கும் மேற்பட்டோர் இந்த மாத்திரை சாப்பிட்டதால் உயிரிழந்தது தெரிய வந்துள்ளது. இதனால் மாத்திரைக்கு உடனடியாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மருந்து நிறுவனம் மீது நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# சவுதியில் பணிப்பெண் சித்திரவதை;

# இந்தோனேசிய ஜனாதிபதி கடும் எதிர்ப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் இருந்து சவுதி அரேபியாவிற்கு வீட்டு வேலைகளுக்காகச் செல்பவர்கள் மீது நடத்தப்படும் சித்திர வதைகளுக்கு இந்தோனேசியா ஜனாதிபதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தோனேசியாவில் இருந்து ஆண்டுக்கு 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் சவுதி அரேபியாவிற்கு வேலை தேடிச் செல்கின்றனர். அவர்கள் அங்கு பல்வேறு சித்ரவதைகள் மற்றும் கொடுமைகளுக்கு ஆளாகின்றனர்.

இந்நாட்டின் மேற்கு நுசா டெங்காரா மாகாணத்தின் டொம்பு என்ற பகுதியைச் சேர்ந்த சுமியடி பின்டி சலன் முஸ்தபா(23) என்ற இளம்பெண் நான்கு மாதங்களுக்கு முன் சவுதி அரேபியாவிற்கு வீட்டு வேலைக்காகச் சென்றார். அவருக்கு வேலை கொடுத்தவர்கள் அவரது உடலில் பல இடங்களில் இரும்புக் கம்பியை பழுக்கக் காய்ச்சி சூடு போட்டுள்ளனர். அவரது முகத்தில் சிகரெட்டால் சுட்டுக் காயப்படுத்தியுள்ளனர். இதனால் அவர் மதினாவில் உள்ள மருத்துவமனை ஒன்றில் கடந்த 8 ஆம் திகதி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இவ் விவகாரம் மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றி வரும் பல்லாயிரக்கணக்கான இந்தோனேசியர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில் இந்த கொடுமையைக் கண்டித்து இந்தோனேசிய ஜனாதிபதி சுசிலோ பம்பாங் யுதோயோனா அளித்த பேட்டியில் கூறுகையில்,

இதுகுறித்து இந்தோனேசியாவின் கவலையை சவுதி அரேபிய அரசுக்கு தெரியப்படுத்தியுள்ளோம். நடந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளோம். சவுதி அரசும் இதற்கு கண்டனம் தெரிவித்துள்ளது. குற்றவாளியைத் தண்டிக்க வேண்டும் என இரு தரப்பும் உறுதி பூண்டுள்ளது என்றார். (ஸ்ரீ)

# கட்சியைப் புதுப்பிக்கும் ஆங்சான்சூகி;

# இராணுவ அரசு கடும் எச்சரிக்கை



(யாங்கூன்)

மியன்மாரில் இராணுவ அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் மத்திய தேர்தல் கமிஷன் தனது கட்சியைக் கலைத்ததை எதிர்த்து, அந் நாட்டு உயர்நீதிமன்றில் தேசிய ஜனநாயக லீக் கட்சித் தலைவர் ஆங் சான் சூகி வழக்குப் பதிவு செய்துள்ளார்.

இதையடுத்து, தேர்தலை எதிர்த்து யார் வழக்கு போட்டாலும் அவர்கள் கடும் தண்டனைக்கு உள்ளாவர் என இராணுவ அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மியன்மாரில் கடந்த 1990 இல் அப்போதைய அரசியல் சாசனத்தின்படி அமைந்திருந்த தேர்தல் ஆணையத்தின் கண்காணிப்பில் பொதுத் தேர்தல் நடந்தது. அதில், சூகியின் கட்சி பெரும்பான்மை வெற்றி பெற்றும் கூட, அதை அப்போதைய இராணுவ அரசு நிராகரித்து விட்டது.

இந்நிலையில் 2008 இல் இராணுவ அரசின் தலைவர் மூத்த ஜெனரல் தான் ஷ்வே, புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கினார். அதன்படி, மத்திய தேர்தல் கமிஷனும் புதிதாக மாற்றியமைக்கப்பட்டது. இந்த கமிஷனின் மேற்பார்வையில் கடந்த 7 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடந்தது. இத் தேர்தலை, தனது தேசிய ஜனநாயக லீக் கட்சி புறக்கணிக்கும் என்று அறிவித்தார் சூகி. இதனால் வெறுப்படைந்த இராணுவ அரசு, புதிய சாசனத்தின்படி, சூகி தனது கட்சியைப் புதுப்பிக்கவில்லை என்று கூறி, அவரது கட்சியைக் கலைத்துவிட்டது. இதை எதிர்த்து, சூகி முதலில் உயர்நீதிமன்றில் வழக்குத் தொடுத்தார். உயர் நீதிமன்றம் அதை தள்ளுபடி செய்தது. கடந்த ஒக்டோபரில் அவரது சார்பில் சட்டத்தரணிகள் மீண்டும் வழக்குத் தொடுத்தனர். அவ் வழக்கை ஏற்பதா வேண்டாமா என்பதை இன்று உயர் நீதிமன்றம் முடிவு செய்யவுள்ளது.

இந்நிலையில் கடந்த 21 ஆண்டுகளில் 15 ஆண்டை வீட்டுக் காவலில் கழித்துவிட்ட சூகியை சமீபத்தில் இராணுவ அரசு விடுவித்தது. விடுதலையான மூன்றாம் நாள் அவர் தன் கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்தார். கடந்த செவ்வாய்க்கிழமை இராணுவ அரசால் கட்சி கலைக்கப்பட்டதை எதிர்த்து மீண்டும் உயர்நீதிமன்றில் ஒரு மனுவை நேரடியாக தாக்கல் செய்தார். தன் கட்சி நிலைத்திருக்க, இராணுவ அரசை எதிர்த்துப் போராடத் தயாராக இருப்பதாக சூகி கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

இந்நிலையில், அவருக்கும் பிற ஜனநாயக அரசியல் கட்சிகளுக்கும் எச்சரிக்கை விடுக்கும் விதத்தில், இராணுவ அரசு, மத்திய தேர்தல் கமிஷன் மூலம் ஒரு சுற்றறிக்கையை அனுப்பியுள்ளது. அதில் நடந்து முடிந்த தேர்தல் தொடர்பாக, போலியாக வழக்குத் தொடுக்கும் நபர்களுக்கு மூன்றாண்டு சிறை தண்டனையும், 14 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும். மீறி புகார் அளிக்க விரும்பும் நபர், திரும்பிப்பெறமுடியாத தொகையாக 48 ஆயிரம் ரூபாய் செலுத்தவேண்டும் என்பது தேர்தல் கமிஷனின் விதியாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# ஆண் குழந்தையின் வயிற்றுக்குள் கரு!

(ராய்ப்பூர்)

பிறந்த குழந்தையின் வயிற்றுக்குள் மற்றொரு கரு இருந்த விசித்திர சம்பவம், சட்டீஸ்கர் மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

சட்டீஸ்கர் மாநிலத்தின் தாம்தரி மாவட்டத்தின் அபான்பூர் பகுதியைச் சேர்ந்தவர் திகம்சந்த், இவரது மனைவியின் பெயர் பிலேஸ்வரி, இவர்களுக்கு கடந்த மாதம் 12 ஆம் திகதி ஆண்குழந்தை ஒன்று பிறந்தது. அதன் வயிற்றுப் பகுதியில் வீக்கமாக இருந்ததுடன், குழந்தை தொடர்ந்து அழுதபடி காணப்பட்டது.

ராய்ப்பூர் நகரில் உள்ளது பால் கோபால் குழந்தைகள் மருத்துவமனைக்கு குழந்தையைப் பெற்றோர் எடுத்துச் சென்றனர். குழந்தையைப் பரிசோதித்த டாக்டர்கள் அதிர்ச்சிக்குள்ளாகினர்.

ஒரு மாதக் குழந்தையின் வயிற்றுக்குள் வளராமல் நின்றுபோன கரு இருந்ததை அறிந்தனர். இதையடுத்து , குழந்தைக்கு அறுவைச் சிகிச்சை செய்து கருவை டாக்டர்கள் அகற்றினர்.

இதுபற்றி டாக்டர் அசோக் பாட்டர் கூறுகையில்,

குழந்தையின் வயிற்றை ஸ்கான் செய்து பார்த்தபோது, அதிர்ச்சி அடைந்தோம். பிறந்த குழந்தையின் வயிற்றில் வளர்ச்சி நின்றுபோன நிலையில் கரு இருந்தது. உடனடியாக, டாக்டர்களின் உதவியுடன் அறுவைச் சிகிச்சை செய்து அது அகற்றப்பட்டது.

வெளியே எடுக்கப்பட்ட கருவில் கண்கள் , நகங்கள் இருந்தது ஆச்சரியம். இதுபோல அரிதாக நடப்பதுண்டு. , ஒரேநேரத்தில் இரண்டு கரு உருவாகும் போது ஒன்றின் வளர்ச்சி தடைப்பட்டு மற்றதில் ஒட்டிக் கொள்ளும் என்றார்.

குழந்தையின் தாய் பிலேஸ்வரி தெரிவிக்கையில், "பிறந்தது முதலே குழந்தையின் வயிற்றில் கூடுதல் சதை இருப்பது போலத் தெரிந்தது. குழந்தை அழுதபடி இருந்தது. ஏழையான எங்களால் சிகிச்சை செலவு கருதி மருத்துவமனை செல்லாமல் காலம் கடத்தினோம்.

ஆனால், ராய்ப்பூர் மருத்துவமனை டாக்டர்கள் எங்கள் குழந் தைக்கு மறுவாழ்வு அளித்தனர்" என்றார். (ஸ்ரீ-2)



பிரான்ஸ் நாட்டின் அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டதை தொடர்ந்து, புதிய அமைச்சர்கள் பொறுப்பேற்றபின் தலைநகர் பாரிசில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோஸியுடன் புதிய அமைச்சர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# பொலோன் நிலைக்குத் தள்ளப்பட்ட இலங்கைக்கு இரண்டாவது இன்னிங்ஸில் சிறப்பான ஆரம்பம்



(காலி)

சில்லிங்போட்- ரோஷின் துல்லியமான பந்துவீச்சில் இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 378 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து பொலோன் நிலைக்குத் தள்ளப்பட்டது.

எனினும் இரண்டாவது இன்னிங்ஸில் பரணவிதான- டில்சான் ஜோடி சிறப்பான ஆரம்ப இணைப்பாட்டத்தின் மூலம் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது இலங்கை அணி விக்கெட் இழப்பின்றி 89 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கைக்குச்சுற்றுப்பயணம்மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி மூன்று டெஸ்ட், ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 15 ஆம் திகதி காலியில் ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் 09 விக்கெட்டுக்களையிழந்து 580 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டம் மழை காரணமாக இடைநிறுத்தப்பட்டபோது முதலாவது இன்னிங்ஸில் மூன்று விக்கெட்டுக்களையிழந்து 165 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு மஹேல- சமரவீர ஜோடி பொறுப்பான இணைப்பாட்டத்தை வழங்கினர்.

எனினும் இந்த ஜோடி நான்காவது விக்கெட்டுக்காக 61 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்தபோது மஹேல ஜெயவர்த்தனா 104 பந்துகளில் (06பவுண்டரிகள் உட்பட) 59 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து மத்யூஸ் களமிறங்க மறுமுனையில் திலான் சமரவீர 69 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

எனினும் திலான் சமரவீர 74 பந்துகளில் (06 பவுண்டரிகள் உட்பட) 52 ஓட்டங்களை எடுத்து ரன்-அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பிரசன்ன ஜெயவர்த்தனா சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கை அளித்தார்.

மறுமுனையில் அஞ்சலோ மத்யூஸ் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து நிலைத்து நின்று ஆடத் தவறினார்.

அடுத்து வந்த ரான்டீவ்வும் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 295 ஓட்டங்களை எடுத்து 07-வது விக்கெட்டையிழந்தது.

இந்நிலையில் களமிறங்கிய தம்பிக்க பிரசாத் அதிரடியாக ஆட இலங்கை அணி சரிவிலிருந்து மீண்டது.

இதில் தம்பிக்க பிரசாத் 46 பந்துகளில் (06 பவுண்டரிகள், 02 சிக்ஸர்கள் உட்பட) 47 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க இலங்கை அணி 367 ஓட்டங்களை எடுத்து 08-வது விக்கெட்டையிழந்தது.

இந்நிலையில் இலங்கை அணி பொலோனை தவிர்ப்பதற்கு 02 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 14 ஓட்டங்களை எடுக்க வேண்டியிருந்தது.

எனினும் அடுத்துவந்த மெண்டிஸ் 04 ஓட்டங்களுடனும் மறுமுனையில் பிரசன்ன ஜெயவர்த்தனா 88 பந்துகளில் (04 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 58 ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 378 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன்மூலம் முதலாவது இன்னிங்ஸில் 03 ஓட்டங்கள் குறைவான நிலையிலிருந்த இலங்கை அணியை பொலோன் முறையில் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடுமாறு மேற்கிந்தியத்தீவுகளின் அணித்தலைவர் சமி நிர்ணயித்துள்ளார்.

பந்துவீச்சில் சில்லிங் போர்ட் 04 விக்கெட்டுக்களையும், ரோஷ் 03 விக்கெட்டுக்களையும் ரசேல், பிராவோ ஆகியோர் தலா 01 விக்கெட்டை வீழ்த்தினர்.

இதனடிப்படையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு பரணவிதான- டில்சான் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.


இந்நிலையில் நேற்றைய ஆட்டநேரம் முடிபதற்கு ஒரு மணிநேரம் மீதமிருந்த நிலையில் மழையின் குறுக்கீட்டால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

எனினும் மழை தொடர்ந்தமையால் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட போது இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 89 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பரணவிதான, திலகரட்ட டில்சான் ஆகியோர் தலா 44 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளார்கள்.

இப்போட்டியின் ஐந்தாவதும் இறுதியுமான ஆட்டம் இன்றாகும். இந்நிலையில் இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் 10 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 113 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையில் உள்ளது.

எனவே இப்போட்டியில் வெற்றி பெறுவதற்கு மேற்கிந்தியத்தீவுகள் அணியும் போட்டியை சமநிலையாக்க இலங்கை அணியும் இன்று போராடும்.



சில்லிங் போர்ட்

மழை குறுக்கீடு செய்யாவிட்டால் இன்றைய ஆட்டம் விறுவிறுப்பானதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

## கிழக்குப் பல்கலை மாணவர்கள் 14 பேருக்கு ஒருவருட கற்கைத்தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வந்தாறுமூலையிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 14 மாணவர்களுக்கு ஒருவருட கற்கைத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக கிழக்குப்பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி பிரேம்குமார் தெரிவித்தார். இத்தடை இன்றுமுதல் அமுலுக்கு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வர்த்தகபீட மாணவி ஒருவரை பகிடிவதைக்கு உட்படுத்தியமை தொடர்பில் 5 மாணவர்களுக்கும், அதற்கு முன்னர் நடைபெற்ற சம்பவம் ஒன்றுடன் தொடர்புடையவர்கள் இருவருக்குமாக மொத்தம் 07 பெரும்பான்மையின மாணவர்களுக்கு ஒரு வருட வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிழக்குப்பல்கலைக்கழகத்தின் விபுலானந்த இசை, நடனக் கல்லூரியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் சம்பந்தப்பட்டு விசாரணைகளுக்கான காலத்தில் வகுப்புத்தடை விதிக்கப்பட்டிருந்த 07 மாணவர்க ளுக்கும் இந்த ஒரு வருட கற்கைத்தடை விதிக் கப்பட் டுள்ளது. (ந-5)

## கொழும்பு- தூத்துக்குடி கப்பல் சேவை விரைவில்

(சென்னை)

கொழும்புக்கும் தூத்துக்குடிக்குமிடையிலான கப்பல் சேவை விரைவில் ஆரம்பமாகவுள்ளதாக இந்திய கப்பல்துறை அமைச்சர் ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

உதகமண்டலத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இக்கப்பல் சேவையைக் குறித்து இந்திய, இலங்கை அதிகாரிகள் பேச்சுவார்த்தைகளை நடத்திவருவதாகவும் அனேகமாக 3 மாதங்களில் இச்சேவை ஆரம்பிக்கப்படலாம் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை தூத்துக்குடி, சென்னை துறைமுகங்கள் 3686 கோடி இந்திய ரூபாய் செலவில் புனரமைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

## தமிழரசுக் கட்சியின் மானிப்பாய் கிளை

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழரசுக் கட்சியின் மானிப்பாய் தொகுதிக் கிளை நாளை பிற்பகல் 3.00 மணிக்கு காங்கேசன்துறைத் தொகுதி தமிழரசுக் கட்சிப் பணிமனையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது. (ந-7)

# வரதராஜப்பெருமாளுக்கு அரசவீடு என்பது உண்மைக்குப் புறம்பான செய்தியாகும்

## பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப். சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் வரதராஜப்பெருமாளுக்கு அரசாங்கம் வீடு ஒன்றை வழங்கியிருப்பதாக சிங்கள இணையத்தளம் ஒன்றில் வெளியான செய்தியெனக் குறிப்பிட்டு வலம்புரிப் பத்திரிகையின் முன்பக்கத்தில் நேற்று முன்தினம் (17.11.2010) வெளியிடப்பட்ட செய்தி உண்மைக்குப் புறம்பானதாகும்.

அச்செய்தியில் குறிப்பிட்ட சமிட் தொடர்மாடியில் கடந்த 1999 ஆம் ஆண்டு முதல் இரண்டு அறைகள் மட்டும் உள்ள குடியிருப்பு ஒன்று எமது பயன்பாட்டில் உள்ளது.

கடந்த காலத்தில் சுதந்திரமாகச் செயற்படுவதில் எமது கட்சிக்கிருந்த புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக, முன்னாள் முதல்வர் வரதராஜப்பெருமாளும் அவர் இல்லாத சமயங்களில் இதர முக்கிய தோழர்களும் இங்கு தங்குவது வழமை.

இது ஒன்றும் இரகசியமானதல்ல. இங்கு பல ஊடகவியலாளர்களும், இதர தமிழ், சிங்கள, முஸ்லிம், மலையகக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அவசர, அவசிய தேவைகளின் நிமிர்த்தம் பொதுமக்களும் கூட இங்கு வந்து சென்றிருக்கின்றனர்.

பாதுகாப்பின் நிமிர்த்தம் பல முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் அரசாங்க அதிகாரிகள் இந்தப் பிரதேசத்தில் தங்கியிருப்பதும் புதுமையான விடயமல்ல.

இவ்வாறு பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் யாழ்.பிராந்திய செயலாளர் மோகன் சிவராஜா விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப்பின் சர்வதேசப் பிராந்திய மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அண்மையில்பிரான்ஸ்சென்றிருந்த முன்னாள் முதல்வரும் கட்சியின் மூத்த தலைவருமான வரதராஜப்பெருமாள் சுவிசர்லாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து அங்குள்ள தோழர்கள், நண்பர்கள், பொதுமக்களுடனான பல சந்திப்புக்களையும், அரசியற் கலந்துரையாடல்களையும் நடத்தியிருந்தார்.

அத்துடன் கனடா, இங்கிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த தோழர்கள், நண்பர்களும் அவருடன் சந்தித்து கருத்துப்பரிமாறிக் கொண்டனர்.

இந்தச் சந்திப்புக்கள், கலந்துரை யாடல்களின் போது அவர் எமது போராட்டத் தில் ஏற்பட்ட தவறுகள், எமது கோரிக்கைகள், எமது இன்றைய நிலை, எதிர்காலத்தில் நாம் செயற்பட வேண்டிய முறை என்பன குறித்து கருத்துக்களை பரிமாறிக்கொண்டார்.

இக்கருத்துக்கள் கண்மூடித்தனமாக அரசாங்கத்தை ஆதரிப்பதாகவோ, தமிழ் மக்களின் கோரிக்கைகளை புறக்கணிப்பதாகவோ இருக்கவில்லை. இது தொடர்பான செய்திகள் பல்வேறு இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஏற்கனவே வெளியாகியுள்ளன.

இதைப் பொறுக்கமுடியாத நிலையில் புலம் பெயர் தமிழர்கள் மத்தியில் அரசாங்கத்திற்கு ஆதரவாக பிரசாரம் செய்வதற்கு வரதராஜப்பெருமாளுக்கு அரசாங்கம் கொழும்பில் வீடு ஒன்றை வழங்கியிருக்கிறது என்ற சோடிப்பு புனையப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் தெளிவாக்க காட்டப்பட்டுள்ளது.

# அறுபது படையினரை புலிகள் கூட்டாக கொன்று புதைத்தனர்

## இடம் கண்டறியப்பட்டதாம்

இராணுவத்தினரை கூட்டாக படுகொலை செய்து புதைக்கப்பட்ட இடமொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.போர் இடம்பெற்ற காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்ட குறித்த படைவீரர்கள் கூட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அறுபது படைவீரர்களை கூட்டுக் கொலை செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய முக்கிய விடுதலைப் புலி உறுப்பினரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் மூலம் இந்தத் தகவல்கள் புலப்பட்டுள்ளது.

சில ஆண்டுகளாக புலிகளினால் கைது செய்யப்பட்ட அரச படையினர் கிளிநொச்சியில் காணப்பட்ட சித்திரவதைக் கூடமொன்றில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்.கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்களில் 5 கடற்படை வீரர்களும் அடங்குவர்.போர் உச்சக் கட்டத்தை அடைந்த சந்தர்ப்பத்தில் இக்கொலை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

படுகொலை செய்யப்பட்டவர்களின் சடலத்தை தீயிட்டு கொளுத்தி பின்னர் அவற்றை மண்ணால் மூடியதாக விடுதலைப் புலி சந்தேக நபர் தெரிவித்துள்ளதாக லங்காதீப மேலும் தெரிவித்துள்ளது. (ந-5)

## புலிப் பயங்கரவாதத்திற்...

அனைத்து நிர்வாகக் கட்டமைப்புகளையும் ஆளும் கட்சி அடக்குமுறைக்கு உட்படுத்தி வருகின்றது.

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகா வெற்றியீட்டினார் என்பதனை மகிந்த ராஜபக்ஷ, கோத்தபாஜ ராஜபக்ஷ ஆகியோரின் மனச்சாட்சிகள் நன்கு அறியும்.

இதன் காரணமாகவே சரத் பொன்சேகாவிற்கு எதிராக அரசாங்கம் வழக்குகளை அடுக்கிச் செல்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

## விடுதலைப் புலிகளின்...

துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ள புலிச் சந்தேக நபரிடம் நடத்தப்பட்ட விசாரணையின்போது கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர்களின் ஒருவரான கிருஷ்ணப்பிள்ளை சிவஞானம் என்பவர் இலங்கையில் தங்கியிருந்த காலத்தில் இந்த வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பணத்தை சர்வதேச வலைமைப்பிற்கு அனுப்பி வைத்த சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரண்டு பேரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைத்து விசாரிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ந-5)

**தவறிவிட்டது**

இருபாலை கிழக்கு கோப்பாய் தெற்கு என்னும் முகவரியைக் கொண்ட பூரணேஸ்வரன் அமலகாந் என்பவரின் 893240349V இலக்கத்தையுடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0775314055 எனும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். (சி-1648)

## வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 21.10.2010

வியாழக்கிழமை சிவபதமடைந்த

எங்கள் குடும்பத் தலைவி

அமரர்(திருமதி)

**இராஜேஸ்வரி சிறீராஜபுலேந்திரன்**

அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் 18.11.2010 வியாழக்கிழமை காலை வில்லூன்றி புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன.

வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை 20.11.2010 சனிக்கிழமை மு.ப.11.00 மணியளவில்அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனநிகழ்விலும்கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் நோயுற்றிருந்தவேளை முதல் இறுதிக்கிரியைகள் வரை பல வழிகளிலும் உதவி,ஒத்தாசை புரிந்த அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

29, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
பொ.சிறீராஜபுலேந்திரன் (கணவர்)
(சரவணா அச்சகம்)

(இ)

## 2ஆவது தடவையாக...

இலங்கையின் 6ஆவது ஜனாதிபதியாக தெரிவான மகிந்த ராஜபக்ஷ கடந்த 6 ஆண்டுகள் பதவி வகித்து வந்தார்.

இந்நிலையில் கடந்த ஜனவரி மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் தெரிவு செய்யப்பட்ட மகிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது ஜனாதிபதி பதவிக் காலத்தை இன்று ஏற்கவுள்ளார். இதனை முன்னிட்டு தேசிய வைபவம் இன்று காலை கொழும்பு காலி முகத்திடலில் நடைபெறுகின்றது.

இதில் முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையும்,பாடசாலை மாணவர்கள், கலைஞர்களின் கலை நிகழ்வும் நடைபெற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியேற்பு உரை நிகழ்த்தவுள்ளார்.

இவ்வைபவத்திற்கு மாலைதீவு ஜனாதிபதி, பூட்டான் பிரதமர்,சீன ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி, சீனாவின் தேசிய மக்கள் காங்கிரஸ் நிலையியற் குழுவின் உபதலைவர் சங்குவேய், பாகிஸ்தான் செனட் சபையின் பிரதிநிதி, இந்திய அரசின் பிரதிநிதி உள்ளிட்ட 150 வெளிநாட்டு அதிதிகள் கலந்து கொள்கிறார்கள்.

அத்துடன் ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக்காலத்தை முன்னிட்டு பிரகடனப்படுத்தப் பட்டுள்ள ஒரு வார கால நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு அங்கமாக நடைபெறும் சுதந்திரம், தேசிய கலாசார கண்காட்சியில் நேற்று ஜனாதிபதியின் பிறந்த தினத்தையொட்டி உலகிலேயே அதி கூடிய அளவிலான பாற்சோறு தயாரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## நாடுகடந்த தமிழீழ...

தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த இலங்கை தூதுவராலயங்கள் உரிய முனைப்பு காட்டத் தவறியுள்ளன.எஞ்சியுள்ள விடுதலைப் புலி செயற்பாட்டாளர்களுக்கு எதிராக அமைச்சர்கள் குரல் கொடுக்கவில்லை.

இந்த நிலைமைகள் குறித்து தமிழ் நாடாளுமன்ற நண்பர்களிடம் தாம் வினவியதாகவும் அவர்களும் புலிகளின் சர்வதேச வலையமைப்புக் குறித்து அறிந்திருக்கவில்லை எனவும் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். (ந-5)

## மினிபஸ்-மோ.சைக்கிள்...

இருந்து வந்த மினிவானுடன் மருதனார்மடம் வீதியூடாக உரும்பிராய்ச் சந்தி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானது.

இதன் போது மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டையிழந்து 200 மீற்றர் தூரம் இழுத்துச்சென்று மினிவானுடன் விபத்துக்குள்ளான தாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற சுப்பிரமணியம்ஜெயச்சந்திரன் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ந-5)

## மாவீரர் தினத்தில் யாழ்...

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான கூட்டு ஆணைக்குழு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் 25ஆம் திகதி இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவ் விஜயத்தின் போது அவர் யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டையில் இந்தியத் துணைத் தூதரங்களை திறந்து வைக்கவுள்ளார். யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள துணைத் தூதரகத்தை திறந்து வைப்பதற்காக 27ஆம் திகதி அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இங்கு வரவுள்ளார்.

யாழ்.குடாநாட்டில் இந்தியாவின் துணைத் தூதரகத்தை திறந்து வைத்த பின்னர் இலங்கை இனப்பிரச்சினை குறித்த இந்தியாவின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவார் என இந்த ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் இனப்பிரச்சினை குறித்து இந்தியாவின் உறுதியான நிலைப்பாட்டை கிருஷ்ணா வெளிப்படுத்துவார் எனில் அது இந்தியாவின் சிந்தனைப் போக்கை அறிவதற்கான சந்தர்ப்பமாக அமையும்எனகொழும்பு ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வில் கலந்துகொள்ள புதுடில்லிக்குச் சென்றிருந்தபோது அவரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு துரிதமாகஅரசியல்தீர்வு காணவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார்.

இந் நிலையில் இந்தியப் பிரதமரின் இக்கோரிக்கை தொடர்பில் உடனடிப் பலன் ஏதும் கிடைக்காத நிலையில் தங்களது நிலைப்பாடு என்ன என்பதை யாழ்ப்பாணத்தில் வைத்து கிருஷ்ணா தெளிவுபடுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை இந்தியாவின் அயல் நாடு ஒன்றில் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் என்பன மறுக்கப்படும் போது அவற்றுக்கெதிராக இந்தியா குரல் கொடுப்பது அந்நாடுகளின் இறையாண்மையில் அது தலையிடுவதாக அமையாது என அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியிருந்தார்.

இங்கு அயல்நாடு என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இலங்கை போன்ற நாடுகளையே குறிப்பிட்டு சொல்லியிருப்பார் என நம்பப்படுகிறது.

இவ்வாறு தனது அயல் நாடுகளில் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படும் போது அது குறித்த கேள்வி எழுப்ப வேண்டியது ஜனநாயக நாடான இந்தியாவின் கடமைப்பாடு என அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இலங்கை அரசாங்கத்துக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகள் மேலும் வலுவடைந்து வருகின்ற நிலையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என அமெரிக்கா அழுத்தங்களை பிரயோகிப்பதாக கொழும்பு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந் நிலையில் அமெரிக்காவினது கருத்துக்களையும் மனதில் கொண்டு இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத் தூதரகத்தை திறந்துவைக்க செல்லும் அவர் வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் தேவைக்காக 100 உழவு இயந்திரங்களையும் கையளிக்கவுள்ளார்.

இந்தியாவின் மகேந்திர நிறுவன தயாரிப்புக்களான இந்த உழவு இயந்திரங்கள் முகப்பில் இந்திய அரச குறியீடான அசோகச் சக்கரம் பொறிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் விவசாயம் மற்றும் பொருளாதார அபிவிருத்திகளுக்கு உதவி வழங்குவதாக இந்தியா வழங்கிய உறுதி மொழியின் ஒரு பகுதியாக இந்த உதவிகள் வழக்கப்படவுள்ளன.

இந்தியாவின் உதவியுடன் வடக்கில் நிர்மாணிக்கப்படவுள்ள 50 ஆயிரம் வீடுகளில் ஆயிரம் வீடுகளை முதலில் நிர்மாணிப்பதற்காக உடன்பாடு செய்து கொள்ளப்பட்டுள்ளது. (ந-5)

**MyWay English 3 மாத சனி, ஞாயிறு பயிற்சிநெறி**

21.11.2010 இற்குப்பின் அதிபர், ஆசிரியர், அரச அலுவலர், பலகலைக்கழக மாணவர்கள் மட்டுமே சனி, ஞாயிறு 3 மாத ஆங்கில பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளதால்

பயிற்சியில் சேர விரும்பும் தனியார் அலுவலர்கள், வங்கியாளர்கள், காப்புறுதி ஊழியர்கள், அரச சார்பற்ற நிறுவன பணியாளர்கள், இளைஞர் மற்றும் யுவதிகள் 21.11.2010 இற்குமுன் பயிற்சியில் சேரலாம்

பிரிவுகள் : காலை 8 - 9, 10 - 11, 11 - 12 மாலை 1 - 2, 2 - 3, 4 - 5

ஆங்கிலத்தில் ஒரு சொல்கூட தெரியாதவர்களும் 3 மாதத்தில் முழுமையாக ஆங்கிலத்தில் பேசலாம்

MyWay English 182, Stanley Rd Jaffna 077 33 63 456

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.